வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 22.06.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 201 | பக்கங்கள் : 16




## வியாழேந்திரனின் மெய்க்காவலர் சுட்டதில் டிப்பர் சாரதி உயிரிழப்பு


### மட்டக்களப்பில் நேற்று மாலை சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 22

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் பாதுகாப்பு உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் டிப்பர் வாகனச் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு சின்ன ஊறணியில் உள்ள இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழந்திரனின் இல்லத்தின் முன்னால் நேற்று மாலை 5.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பதில் 15



## நேற்றும் 2,098 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 22

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 98 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 41 ஆயிரத்து 820 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 7 ஆயிரத்து 287 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப் படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 900 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## தொற்றுக்கு 52 பேர் பலி!

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 52 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று உறுதிப்படுத்தினார்.

இந்த மரணங்களால் நாட்டில் கொரோனா தொற்றால் மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 633ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 22 பெண்களும், 30 ஆண்களும் உள்ளடங்குவர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

# பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை பாதிக்கும் அரசின் புதிய நியமனங்கள்!

### 47 ஆவது ஜெனிவா கூட்ட தொடரை ஆரம்பித்து வைத்து மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்செலெட் உரை



ஜெனிவா, ஜூன் 22

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றுக்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்தும், சமீபத்தைய பயங்கரவாத தடை சட்டவிதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்செலெட் நேற்று ஜெனிவாவில் கரிசனை வெளியிட்டுள்ளார். 15

## கண்டாவளையில் 18 பேர் உட்பட வடக்கில் நேற்று 45 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜூன், 22

யாழ்ப்பாணத்தில் 22 பேரும், கிளிநொச்சி கண்டாவளையில் 18 பேருமாக வடக்கு மாகாணத்தில் நேற்று 45 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களின் பரிசோதனை அறிக்கையிலேயே இந்த விவ 15

## அரசாங்க தகவல் இணையத்தில் பெருமளவு தமிழ் கொலைகள்

### அரசு திருத்த வேண்டும் என்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன் 22

கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்வதற்காக அரசாங்க தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ள விபரங்களில் மிக மோசமான தமிழ் மொழி கொலை இடம்பெற்றுள்ளதாகவும் இதனை திருத்துவதற்கு அரசாங் 15

## இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் இரு தரப்பு உறவுகள் குறித்து முக்கிய பேச்சு

புதுடில்லி, ஜூன் 22

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் விரிவான பேச்சுக்களை நேற்று திங்கட்கிழமை நடத்தினார் என பி.ரி.ஐ. செய்திச் சேவை நேற்றிரவு தெரிவித்தது.

இணையத் தொழில்நுட்பத்தின் ஊடாக மெய்நிகர் சந்திப்பாக இது இடம்பெற்றது. இதன்போது இரு தரப்பு உறவுகள், பிராந்திய விவகாரங்கள் தொடர்பில் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.


கோப்புப் படம்

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் மூலமாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவருவது 15




## அத்தியாவசியமான ஊழியர்கள் மட்டுமே பணிகளுக்காக அழைக்கப்படவேண்டும்!

### நிறுவனத் தலைவர்களுக்கு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 22

அரச அத்தியாவசிய சேவைக்கு அத்தியாவசிய எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களை மட்டுமே அழைக்குமாறு நிறுவனத் தலைவர்களிடம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

அரச அல்லது அரை அரச நிறுவனங்களில் அத்தியாவசிய மற்ற சேவைகளில் உள்ள ஒவ்வொரு பணியாளரும் வாரத்தில் அதிகபட்சம் 2 நாள்கள் மட்டுமே வேலைக்கு அழைக்கப் படவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தியாவசிய சேவை மற்றும் அத்தியாவசியம் அல்லாத சேவைக்குள் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு பஸ் நிலையத்தில் ஒரு பெண் தன்னுடைய மகனுடன் பதற்றமாக நின்று கொண்டிருந்தாள். பக்கத்தில் உள்ளவர்கள் என்னவென்று கேட்டனர்.

'இவன் காசை விழுங்கி விட்டான். என்ன செய்வதென்று தெரியவில்லை' என்றாள் பதற்றத்துடன்.

ஒவ்வொருவரும் அவளுக்கு ஆலோசனை சொல்ல ஆரம்பித்தார்கள். "நாலு வாழைப் பழத்தை ஊட்டி விடு. தானா வெளியே வந்துடும்"

"ஆஸ்பத்திரிக்குப் போய் எக்ஸ்ரே எடுத்துப் பார்..."

இப்படி ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய ஆலோசனைகளை கூறிக்கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் பையனைத் தூக்கிக் குனிய வைத்து முதுகில் தட்டிக் கொடுத்தார். பையன் விழுங்கிய காசு வெளியே வரவில்லை.

அப்போது அங்கு வந்த ஒருவர், பையனைத் தூக்கி, தலைகீழாகப் பிடித்துக் குலுக்கி, ஒருதட்டுத் தட்டினார். காசு வெளியே வந்து விழுந்தது.

எல்லாரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அந்தப் பெண் நன்றியுடன் அவரைப் பார்த்தாள். 'ஐயா, நீங்க டொக்டரா?' என்றாள்.

"இல்லை வருமானவரி அதிகாரி. எங்கே, எப்படித் தட்டினால் காசு விழும்னு எனக்குத் தெரியாதா? என்றார்.

வடக்கு மாகாணத்தின் மூத்த நிர்வாக சேவை அதிகாரியான அவர்தான், கூட்டமைப்பின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் என்று சில வருடங்களுக்கு முன்னர் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அவரை அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க தனது விருப்பத்தை அந்தத் 'தலை'வரே நேரில் அவருக்கு தெரிவித்தாரென, அந்தக் காலத்தில் அவர், தனக்கு நெருக்கமானவர்களுக்கு தெரிவித்திருந்ததாரெனவும் ஒரு தகவல் உண்டு.

விக்னேஸ்வரன் மீதான அம்புகள் எறியப்பட்ட காலகட்டத்தில் நடந்த இந்த விவகாரம் இப்போது சாத்தியமாகாது என்பதை தெரிந்துகொண்ட அந்த அதிகாரி, தனது பதவிக்காலத்தை நீடிக்க இப்போது காய்நகர்த்துகின்றாராம்.

தன்னை வேட்பாளராக்க விரும்பியவர் இப்போதும் அதேவிருப்பத்தோடு இருந்தாலும், அவர் நினைத்தாலும் தான் வேட்பாளராக முடியாது என்பதை தெரிந்துகொள்ளும் அளவிற்கு அவர் அரசியல் தெரியாதவராக இருக்க முடியாதுதானே!.

இப்போது அரசனை நம்பி, புருசனைக் கைவிட்ட கதையாக இருந்துவிடக்கூடாது என்பதால், தனது பதவிக்காலத்தை நீடிக்க அவர் முயன்று வருகிறாராம்.

அதற்காக அவர் ஓர் உள்ளூர் அரசியல்வாதியை நாடியிருப்பதாகவும், அதற்காக அந்த அரசியல்வாதி சில நிபந்தனைகளை விதித்திருப்பதாகவும் அதிகாரிகள் மட்டத்தில் குசுகுசுக்கப்படுகின்றது.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பெரும்பகுதியை தான் தரும் திட்டங்களுக்கு ஒதுக்குமாறு அந்த அரசியல்வாதி விடுத்த கோரிக்கையை காதும்காதும் வைத்ததுபோல செய்துவருகிறாராம் அந்த அதிகாரி.

நிர்வாக சேவை அதிகாரியாக இருந்தாலும் அவரை கூட்டமைப்பு தனது வேட்பாளராக, அதுவும் முதல்வர் வேட்பாளராக நியமிக்க விரும்பியது என்றால், அவர் ஒரு தமிழ்த் தேசிய ஆதரவாளராகத்தானே இருக்கமுடியும்? அவருக்கு எப்படி இந்த அரசு உதவ முடியும் என்று அவருக்கு வேண்டப்படாத சிலர் அரச உயர்பீடத்திற்கு எடுத்துச் சென்றிருப்பதாகவும் ஒரு தகவலை சொன்னார் ஓர் அதிகாரி. இதைச் சொன்னவரே சொன்னார், தன்னை தமிழ்த் தேசியவாதி என்று கூட்டமைப்பினரை நம்பவைத்த அவருக்கு, அரச ஆதரவாளர் என்று நம்பவைப்பதும் பெரிய விடயமல்ல என்றார்.

அந்த வருமான அதிகாரி, பையன் விழுங்கிய காசை எடுத்தபின் சொன்னதுதான், இந்தச் செய்தியை அறிந்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

எங்கே தட்டினால் எப்படி விழும் என்பதை அந்த நிர்வாகசேவை அதிகாரியும் தெரிந்துதான் வைத்திருக்கிறார் போலும்.

**- ஊர்க்குருவி**

# ரூ. 20ஆயிரம் கோடி குறைநிரப்பு பிரேரணை நாளை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்!

**கொழும்பு, ஜூன் 22,**

**கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய செலவுகளுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக குறைநிரப்பு பிரேரணை நாளை புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.**

இந்த குறைநிரப்பு பிரேரணையை நாளை புதன்கிழமை நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு சமர்ப்பித்தவுடன் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்ற வரலாற்றில் இந்தளவு பாரிய தொகை நிதி கொண்ட குறை நிரப்பு பிரேரணை இதுவரையில் எந்த அரசினாலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொரோனா தடுப்பூசி மருந்துகளை கொள்வனவு செய்யவும், கொரோனா காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொருளாதார துறையினருக்கு நிவாரணத்தை வழங்குவதற்காகவும் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய செலவுகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் 1.5 வீதமான நிதி எனவும் அவர் கூறியுள்ளார்.

# மேல் மாகாணத்திலுள்ள நிறுவனங்களுக்கு புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியீடு

*கொழும்பு, ஜூன் 22*

இலங்கையில் நேற்று பயணத்தடை தளர்த்தப்பட்டுள்ளமைக்கு அமைவாக, புதுப்பிக்கப்பட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய விதிகளின்படி, மேல் மாகாணத்துக்குரிய வழி காட்டுதல்களில் ஊழியர்களை சேவைக்கு அழைப்பது தொடர்பில் ஐந்து விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.



அத்தியாவசிய மற்றும் அத்தி யாவசியமற்ற சேவைகளுக்குள் அடங்கும் அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பகுதிநிலை அரச நிறுவனங்களின் பணியிடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்துகளைக் கருத்தில் கொண்டு இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, அத்தியாவசிய சேவைகளின் கீழ் வரும் அரசு நிறுவனங்கள், சுகாதார வழிகாட்டுதலில் குறிப்பிடப் பட்டுள்ளமைக்கு அமைய பணியிடத் திறனை அடிப்படையாகக் கொண்டு அத்தியாவசியமற்ற சேவைகளின் கீழ் ஊழியர்களையும் அதிகாரிகளையும் மட்டுமே அனுமதிக்க முடியும்.

அத்தியாவசியமற்ற சேவைகளின் கீழ் வரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது ஊழியர்களையும் அதிகாரிகளையும் வாரத்திற்கு அதிகபட்சம் இரண்டு நாட்கள் அலுவலகத்திற்கு அனுமதிக்க முடியும்.

அத்தோடு, அத்தியாவசிய மற்ற சேவைகளின் கீழ் உள்ள நிறுவனங்கள் வீடுகளில் இருந்து தங்கள் கடமைகளை செய்ய முடியாவிட்டால் மட்டுமே பணியிடங்களுக்கு அனுமதிக்கப் படுவார்கள். அதேநேரத்தில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அலுவலகத்தால் போக்கு வரத்து வழங்கப்படவேண்டும்.

மேல் மாகாணத்தில் பொதுப் போக்குவரத்து அத்தியாவசிய சேவைகளின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

இதேவேளை, தனியார் நிறுவனங்கள் இந்தக் காலகட்டத்தில் முடிந்தவரை வீடுகளில் இருந்து வேலை மற்றும் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு அறி வித்துள்ளது. (இ)



## பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆராய்வு

*கொழும்பு, ஜூன் 22*

கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் ஒரு மாதத்தின் பின்னர் நேற்று அதிகாலை விலக்கிக் கொள் ளப்பட்ட நிலையில் பாடசாலைகளை மீளவும் ஆரம் பிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் உடனடியாக பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நிபுணர்களை உள்ளடக்கிய விஷேட குழுவினர் இது தொடர்பாக தொடர்ந்தும் ஆராய்ந்து வருகிறார்கள்.

மாணவர்களின் உயர்ந்த பட்ச சுகாதார பாதுகாப்பை கருத்தில் கொண்டு பாடசாலைகளை மீண்டும் திறப்பது பற்றி கவனம் செலுத்தப்பட உள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

# யாழில் 3 வீடுகளில் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

### *5 கிராம் ஹெரோயின் உட்பட திருடப்பட்ட பொருட்களும் மீட்பு*



*யாழ்ப்பாணம், ஜூன் 22*

யாழ்., இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூன்று வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் உள்ளிட்ட திருடப்பட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சில்லாலையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (இ- 3)

ஈழநாடு
Eelanadu
22.06.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை

பேச்சு பல்லக்கு, ஆனால் தம்பி கால்நடை - என்று ஒரு பழமொழி உண்டு. இன்று, தமிழ் தேசிய அரசியல் சூழலில் இடம்பெறும் உரையாடல்களை அவதானித்தால் இந்த பழமொழிதான் நினைவுக்கு வரும்.

சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இந்திய தூதுவருக்கும் இடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றிருந்தது. அது ஒரு வழமையான சந்திப்பு. இதுதொடர்பில் நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கின்றோம். ஆனால், இந்த சந்திப்பின் போது ஒரு சுவாரஸியமான விடயம் இடம்பெற்றது.

இன்றைய தலைப்பிற்கும் அந்த சம்பவத்திற்கும் ஒரு தொடர்புண்டு. அதவாது, இந்த சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் தலைவர்கள் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்து வருவது தொடர்பில் குறிப்பிட்டிருக்கின்றனர். வட,கிழக்கிற்குள்ளும் சீனா கால் பதிக்கப் போகின்றது - இதையெல்லாம் நீங்கள் கண்டுகொள்ளாமல் இருக்கின்றீர்களே என்றவாறு அறிவுரை சொல்ல முற்பட்டிருக்கின்றனர். இதனை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த இந்திய தூதுவர், ஒரு கட்டத்தில் எரிச்சலடைந்து, இந்தியாவின் நலன்களை பாதுகாப்பது எவ்வாறு என்று இந்தியாவிற்கு தெரியும் என்று பதிலளித்திருக்கின்றார். இதன் பின்னர் கூட்டமைப்பினர் சீனக் கதையை விட்டுவிட்டனர்.

இதனை இந்த இடத்தில் குறிப்பிடுவதற்கு ஒரு காரணமுண்டு. தமிழ் அரசியல்வாதிகள் (எல்லோரும் அல்ல) மற்றும் ஆய்வாளர்கள், அறிஞர்கள் என்னும் அடைமொழிகளுடன் செயல்படுவர்களின் கருத்துக்களை அவதானித்தால், இந்தியா ஒரு மடத்தனமான நாடு. ஆனால், தாங்களோ இந்தியாவிற்கே புத்தி சொல்லக்கூடிய தகுதியுள்ளவர்கள் என்பது போன்றே பேசிவருகின்றனர்.

இன்னும் ஒரு சிலரோ, இந்தியாவின் தேசிய பாதுகாப்பே ஈழத் தமிழர்களை நம்பித்தான் இருக்கின்றது என்பதுபோன்றும் பேசிவருகின்றனர். அமெரிக்கா மீண்டும் காய் நகர்த்துவதாக கூறுகின்றனர். ஒரு பிராந்திய சக்தியான இந்தியாவிற்கு புத்தி சொல்லக்கூடிய தகுதியுள்ளவர்களால் ஏன் தமிழ் மக்களின் நலன்களை இதுவரையில் வெற்றிகொள்ள முடியவில்லை? உலக அதிகாரமான அமெரிக்காவின் காய் நகர்த்தல்களை முன்கூட்டியே நம்மால் அறிந்துகொள்ள முடியுமென்றால், பின்னர் ஏன் தமிழர்களாகிய நாங்கள் இந்த நிலையில் இருக்கின்றோம்?

நமது மக்கள் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பலம் பொருந்திய நாடுகளின் நலன்களை எவ்வாறு வெற்றிகொள்வதென்று அவர்களுக்கு தெரியும். அதுபற்றி நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால், இந்தியாவின் உதவி எங்களுக்கு தேவை என்றால் அதனை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பிலேயே நாம் சிந்திக்கவேண்டும். ஒருவரிடம் உதவியை எதிர்பார்த்தால், நாம் அவருக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்பது ஓர் ஒழுக்க நெறியாகும். அந்த ஒழுக்கநெறி நம்மிடம் இருக்கின்றதா என்பது தொடர்பிலும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

இந்திய தூதுவரை எத்தனை தடவைகள் சந்தித்தாலும் அவர் ஒரு விடயத்தைத்தான் கூறுவார். அதாவது, 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபை என்பதே அது. இந்தியாவுடன் எத்தனை தடவைகள் பேசினாலும், இந்த நிலைமையில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், இலங்கை விடயத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு இதுதான். இந்தியா அதனை மாற்றிக்கொண்டால் மட்டுமே இதில் மாற்றம் வரமுடியும்.

சூழ்நிலையை விளங்கிக்கொண்டு செயல்படுவதே இப்போது நமக்கு அவசியமானது. ஏனெனில், காலம் எவருக்காகவும் காத்திருக்காது. அதனைவிடுத்து, இந்த உலகமே யாழ்ப்பாணத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருப்பதாக கற்பனை செய்துகொண்டிருப்பதால் எந்த பயனும் இல்லை. நாம் பலம்பொருந்திய நாடுகளுக்கு தேவையில்லை. அவர்கள்தான் நமக்கு தேவை. ஒருவேளை நாங்கள் தேவைப்பட்டிருந்தால், முள்ளிவாய்க்காலில் நாம் ஓர் அழிவை சந்தித்திருக்க மாட்டோம். இதனை நாம் எப்போதுமே மறந்துவிடக் கூடாது. பல்லக்கு கற்பனைகளை விடுத்து, யதார்த்தத்தை நோக்கி சிந்திப்பதே இன்றைய தேவையாகும்.

# இன அழிப்பில் ஈடுபடுகிறதா சீனா?

நிக்கோல்ஸ் கிறிஸ்தோப்

*உய்கர் பூர்வகுடி முஸ்லிம்களை சீனா இனஅழிப்பு செய்கிறது என்று அமெரிக்காவும் பிற நாடுகளும் இந்த ஆண்டில் அறிவித்தாலும் அதனால் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. இந்தச் செயல்படாமையானது உச்சபட்சக் குற்றமான இனஅழிப்பின் பயங்கரத்தைக் கண்டுகொள்ளாமல் விடுகிறது. நம் கண் முன்னே வெளிப்படும் நிகழ்வுகளைப் பார்த்து நாம் மரத்துப் போகாமல் இருப்பதற்கு நான் ஓர் உய்கர் பெண்ணை அறிமுகப்படுத்துகிறேன்: தன்னை ‘நான்சி’ என்று அழைக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். அவர் தற்போது அமெரிக்காவில் பத்திரமாக இருந்தாலும் தான் வெளிப்படையாகப் பேசுவது தனது பெற்றோரைப் பாதித்துவிடுமோ என்று அரண்டு போயிருக்கிறார்.*

*சீனாவின் மேற்கு பிராந்தியமான ஜின்ஜியாங்கில் உள்ள முஸ்லிம் சிறுபான்மையினர்தான் உய்கர்கள். நவீன வதை முகாம்களில் பத்து லட்சம் உய்கர் மக்கள் அடைக்கப்பட்டிருப்பது உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இதில், அதிகம் கவனிக்கப்படாத விஷயம் எதுவென்றால், உய்கர் மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் விதத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் குடும்ப கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்தான்.*

*மகப்பேறு மருத்துவரான தன் உறவினர் பற்றி நான்சி கூறுகிறார். “இரண்டு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு வதைமுகாமுக்கு அந்த மருத்துவர் அனுப்பப்பட்டிருக்கிறார். அங்கே இரண்டு பெண்களின் உடல்நலனை முன்னிட்டு அவர்களின் கருத்தடை சாதனத்தை அகற்றியதால் அந்த மருத்துவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.*

*இவரின் மற்றோர் உறவினர் ஓர் உய்கர் கிராமத்தில் குடும்ப கட்டுப்பாடு பணியாளராக இருந்தார். அந்தக் கிராமத்தில் அனுமதி இல்லாமல் ஒரு பெண் கர்ப்பமடைந்ததால் நான்சியின் உறவினருக்கு வதைமுகாமில் இரண்டாண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தக் கர்ப்பவதியின் கணவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது என்று தான் கேள்விப்பட்டாரெனக் கூறும் நான்சி அந்தப் பெண்ணுக்கும் அவரின் குழந்தைக்கும் என்ன ஆனது என்பது பற்றித் தனக்குத் தெரியாது என்கிறார்.*

*நான்சி கூறுவதை உறுதிப்படுத்துவது மிகவும் கடினம். ஆனால், ஜின்ஜியாங்கில் நடைபெற்றுவரும் ஒடுக்குமுறையை வெளிப்படுத்திய பத்திரிகையாளர்கள், வெளியுறவுத் துறை அதிகாரிகள், மனித உரிமைகள் குழுக்கள் போன்றவற்றின் பதிவுகளுடன் நான்சி கூறுவது ஒத்துப்போகிறது.*

*ஆக, என்னதான் நடந்துகொண்டிருக்கிறது? கடந்த காலத்தில் அவ்வப்போது வன்முறையில் ஈடுபட்ட பிரிவினைவாதக் குழு ஒன்றால் சீனா எச்சரிக்கை அடைந்தது. அதனால், ஹான் சீனர்களின் மக்கள்தொகை மிகுந்த அந்தப் பிரதேசத்தில் உய்கர் மக்கள் தொகையைக் குறைப்பதற்கான முயற்சியில் சீனா ஈடுபட்டுக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.*

*இதன் விளைவுதான் கட்டாய குடும்ப கட்டுப்பாட்டுக்கும், கருத்தடை சாதனத்தைக் கட்டாயமாகப் பொருத்துதலுக்குமான இயக்கம். சீனாவில் கருத்தடை சாதனங்கள் பொருத்தப்படுவதில் ஜின்ஜியாங்கில் மட்டும் 80வீதம் அளவுக்கு பொருத்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஒட்டுமொத்த நாட்டின் மக்கள்தொகையில் 2வீதத்துக்கும் குறைவானவர்கள்தான் வசிக்கிறார்கள் உய்கர் முஸ்லிம்கள் வசிக்கும் இரண்டு பெரிய மாவட்டங்களில் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் 84ஆகக் குறைந்திருக்கிறது் இந்தத் தகவல்களெல்லாம் அட்ரியன் ஜென்ஸ் என்ற அறிஞருடையவை.*

*இது ஜின்ஜியாங்கின் முஸ்லிம் சிறுபான்மையினரிடம் மனிதத்தன்மை நீக்கும் செயல்திட்டத்தின் ஒரு பகுதி. பன்றிக்கறி உண்ணுதல், மது அருந்துதல் ஆகிய செயல்களை மேற்கொண்டு முஸ்லிம்கள் தங்கள் மத நம்பிக்கையைக் கைவிடும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். குழந்தைகளுக்கு சித்தாந்த திணிப்பு செய்வதற்காக உறைவிடப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உய்கர் ஆண்கள் சிறைக்கு அனுப்பப்படும்போது, அவர்கள் வீட்டை ஆக்கிரமிக்க ஹான் சீனர்கள் அனுப்பப்படுகிறார்கள்.*

*சீனா உய்கர் முஸ்லிம்களைக் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்யவில்லை ஆகவே, இது வழக்கமான அர்த்தத்தில் இனஅழிப்பு என்று எடுத்துக்கொள்ள முடியாதுதான். ஆனால், இனஅழிப்பு தொடர்பான 1948ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் சட்டப்படி, குறிப்பிட்ட இனக்குழுவின் பிறப்பு எண்ணிக்கையை ஒடுக்கும் சீனாவின் நடவடிக்கைகள் இனஅழிப்பு என்ற வரையறைக்கு உட்படுபவையாகவே தோன்றுகின்றன.*

*வதைமுகாம்களில் அடித்துச் சித்ரவதை செய்ததால் நான்சியின் மாமா ஒருவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இன்னொரு உறவினர் வதைமுகாமிலேயே உயிரிழந்தார் என்றும் நான்சி கூறுகிறார். அவரின் உறவினர்கள் கட்டாய உடலுழைப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பட்டினியிலிருந்து தப்பிப்பதற்கு அவரிடமிருந்து பொலிஸார் லஞ்சம் கேட்கிறார்கள் என்றும் நான்சி கூறுகிறார். இந்தப் பயங்கரங்களுக்கு மத்தியில் உலகம் என்ன செய்ய முடியும்?*

*இதனிடையே ஹொங்கொங்கின் அழிவையும், கடத்தப்பட்டு சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்ட இரண்டு கனடா பணயக் கைதிகளின் நிலையையும் ஜி ஜின்பிங்கின் முரட்டுத்தனமான நடத்தையையும் பற்றிச் சொல்லவே வேண்டாம்.*

*அறிவார்ந்த ஓர் எதிர்வினை: அடுத்த ஆண்டு பீஜிங்கில் நடைபெறவிருக்கும் ‘இன அழிப்பு ஒலிம்பிக்’ போட்டிகளைப் பகுதியளவு புறக்கணிக்கலாம் சீன தயாரிப்புகளைத் தவிர்க்கலாம். இவையெல்லாம் திருப்திகரமானவையோ போதுமானவையோ அல்ல, இவை ஜி ஜின்பிங்கின் நெஞ்சத்தை அசைத்துப்பார்க்காது. ஆனால், இனஅழிப்பு என்று நாம் அறிவிக்கும்போது, நம்மால் அலட்சியமாகவோ ஒன்றும் செய்யாமலோ இருந்துவிட முடியாது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
தேவையற்ற விஷயம் எதிலும் தலையிடாமல் இருங்கள். பணவரவு ஓரளவுதான் இருக்கும். கூடவே சில செலவுகளும் ஏற்படும். உணவு, தூக்கம் பற்றிய ஆரோக்கியம் கெடாமல் கவனமாக இருங்கள்.

**இடபம்**
உங்களின் செல்வமும், செல்வாக்கும் கூடும் நாள் இது. அரசு பணியாளர்களுக்கு நன்மைகள் நடைபெறும் நாள். நீங்கள் விரும்பிய நன்மையை அடைய முயற்சி எடுப்பீர்கள்.

**மிதுனம்**
உஷ்ணம் தொடர்பான நோய்கள் வராமல் காத்துக்கொள்ளுங்கள். எந்தச் செயலையும் பரபரப்பின்றிச் செய்து வெற்றி காண்பீர்கள். சிறு சிறு அனுகூலங்கள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்**
உங்களின் முயற்சிக்குத் தக்கபடி வெற்றித் தேடி வரும். வாகனங்களையும், இயந்திரங்களையும் இயக்கும்போது கவனமாக இருங்கள். தொழில் செய்பவர்களுக்கு ஓரளவு மட்டுமே இலாபம் வரும்.

**சிம்மம்**
முயற்சியை அதிகப்படுத்துவது நல்லது. சுறுசுறுப்பு அதிகரிக்கும். ஒவ்வொரு செயலிலும் அதிகக் கவனம் செலுத்துங்கள். பெற்றோர் உடல் நலத்தில் அலட்சியப்போக்கு வேண்டாம்.

**கன்னி**
பெரிய தொகையை இன்று எதிலும் முதலீடு செய்ய வேண்டாம். உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். தந்தையால் நன்மை உண்டு. பேராசையால் சிரமப்பட வேண்டாம்.

**துலாம்**
யாரையும் ஏமாற்றும் எண்ணம் வராதபடி காத்துக் கொள்ளுங்கள். வர்த்தக முதலீடுகளைச் சற்றுத் தள்ளிப்போடுவது நல்லது. பணியிடத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பீர்கள்.

**விருட்சிகம்**
யாரை நம்பியும் உங்கள் வேலை எதையும் ஒப்படைக்காதீர்கள். சிலர் திட்டமிட்டே கூட உங்களை சிரமத்தில் தள்ளக்கூடும். பழைய திட்டத்துக்காக முழு ஈடுபாட்டுடன் முயற்சி செய்வீர்கள்.

**தனுசு**
தீயவர்களின் நட்பு வேண்டாம். முயற்சிகள் நல்லபடியாக முடியும். சின்ன விஷயத்தையும் முயன்றுதான் முடிக்கவேண்டி இருக்கும். உணவுப் பழக்கத்தில் மிகுந்த கவனமாக இருங்கள்.

**மகரம்**
சொத்து விற்பதில் சிறிய தடை ஏற்பட்டாலும் அவை நீங்கும். தன்னம்பிக்கை கூடும். செல்வாக்கு அதிகரிக்கும். புதுப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். மன அடக்கம் தேவை.

**கும்பம்**
தெளிவாகச் சிந்தித்தால் பிரச்னைகளுக்குத் தீர்வு. வேலைக்கு முயற்சிப்போருக்கு நற் செய்தி ஒன்று கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படாமல் பேசுங்கள். பொறுமை தேவை.

**மீனம்**
பிள்ளைகளின் உயர்கல்வி பற்றிய கவலைகள் வந்து போகும். பிற மொழி பேசுபவர்களால் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும்.பொறுப்புடன் செயல்பட்டால் பிரச்னை வராது. செயலில் கவனம் தேவை.

# ஈழத் தமிழர் உரிமையை உறுதிசெய்ய மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்!

## தமிழக சட்டப்பேரவையின் கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து ஆளுநர் பன்வாரிலால் உரை

சென்னை, ஜூன் 22



“ஈழத் தமிழர்களுக்கு சம குடிமைசார் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்திட, இலங்கை அரசை அறிவுறுத்துமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்” என தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தமிழக சட்டப்பேரவைக்கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றியபோது தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்ற பின்னர் தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று திங்கட்கிழமை முதன்முறை யாகக் கூடியது. பேரவைக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் கொள்ளை விளக்க உரையை நிகழ்த்தினார். இந்த உரையில் முக்கியமாக அவர் தெரிவித்தவை வரு மாறு:

“இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க தேவையான சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தும். ஈழத் தமிழர்களுக்கு சம குடிமைசார் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்திட, இலங்கை அரசை அறிவுறுத்துமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

தமிழ் மொழியை இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாக அறிவிக்க மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும். தமிழ்நாட்டிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட அனைத்து மத்திய அரசு அலுவலகங்களிலும் தமிழ்மொழி இணை - அலுவல் மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 343 இல் உரிய திருத்தங்களை மேற்கொள்ளவும் மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்தும்.

வலுவான மாநில அரசுகள் மூலமாகவே ஒரு வலிமையான மத்திய அரசை உருவாக்கிட முடியும். இந்த அரசு மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக நிற்பதுடன், மாநில அரசுகளின் உரிமைகள் மீறப்பட்டால் அரசியலமைப்பின் துணையோடு அதைக் கடுமையாக எதிர்க்கும்” என ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவித்திருந்தார்.

# தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாம்கள் அனைத்தையும் மூடிவிட வேண்டும்

## சீமான் வலியுறுத்தல்



சென்னை. ஜூன் 22

“திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாம் எனப்படும் வதைமுகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 78 ஈழத்தமிழ்ச் சொந்தங்கள் கடந்த 13 நாட்களுக்கும் மேலாகப் பட்டினிப் போராட்டம் நடத்தி வரும் செய்தியறிந்து மன வேதனையடைந்தேன். தமிழகம் முழுவதிலுமுள்ள இது போன்ற சிறப்பு முகாம்கள் உட னடியாக மூடப் படவேண்டும்.”

இவ்வாறு வலியுறுத்தியிருக்கின் றார் நாம் தமிழர் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். இது தொடர்பில் சீமான் நேற்று வெளி யிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

“கொரோனா பெருந்தொற்றுப் பரவும் தற்காலப் பேரிடர் சூழலில்கூட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இல்லாத வதை முகாம்களில் ஈழ உறவுகளை அடைத்து வைத்து மனித உரிமை மீறல்களை அரங்கேற்றுவது வன்மையானக் கண்டனத்திற்குரியது. தங்களது நியாயமான கோரிக் கைகளை அறவழியில் முன்வைத்தும், அரசின் கவனத்தை ஈர்க்க பல்வேறு முன்னெடுப்புகளைச்செய்தும், அதனை ஆளும் வர்க்கம் ஏற்காத நிலையில், தங்களைக் கருணைக்கொலைசெய்துவிடுமாறு அவர்கள் வைத்திருக்கும் வேண்டுகோள் தாங்கொணாத் துயரத்தையும், தீரா மனவலியையும் தருகிறது.

இன்று நேற்றல்லாது பல ஆண்டுகளாக, சிறப்பு முகாம்கள் எனப்படும் வதைமுகாம்களை மூடக் கோரிப் போராடியும் ஆளுகிற அரசுகள் அதனை செய்ய மறுத்து வருவதன் அரசியலை உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழகத்திலுள்ள இந்த முகாம்களை மூடி, ஈழச் சொந்தங்களுக்கான நல வாழ்வையும், கௌரவமான வாழ்க்கைச்சூழலையும் உருவாக்கித் தர வேண்டியது தமிழக அரசின் தார்மீக கடமையாகும்” என சீமான் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஸ்டாலினுக்கு ஆலோசனை வழங்க 5 பேர் கொண்ட நிபுணர் குழு நியமனம்

## நோபல் பரிசு பெற்ற ஒருவரும் அதில் உள்ளடக்கம்

சென்னை, ஜூன் 22

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஆலோசனை வழங்க நோபல் பரிசுபெற்ற நிபுணர் உள்பட 5 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையின் 16 வது கூட்டத்தொடர் நேற்று காலை தொடங்கியது. கொரோனா தொற்று காரணமாக கலைவாணர் அரங்கின் மூன்றாம் தளத்தில் சபை நடைபெற்றது. முதல் நாள் ஆளுநர் உரையுடன் தொடங்கியது. ஆளுநர் தனது உரையில், தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த முதல்-அமைச்சருக்கு ஆலோசனை வழங்க முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு ஒன்று உருவாக்கப்படும். இந்தக் குழுவில் உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்கள் இருப்பார்கள் எனத் தெரிவித்தார்.

இதுகுறித்து ஆளுநர் தனது உரையில், “வரும் சில ஆண்டுகளுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய மனித வளத்தின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்தி விரைவான பொருளாதார வளர்ச்சி பெற முற்படுவோம். இந்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான பாதை அமைத்து தமிழக முதலமைச்சருக்கு ஆலோசனை கூற பொருளாதார ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் எழுச்சிபெறச் செய்து பொருளாதாரத்தின் பயன்களை அனைவரும் பெற இந்த அரசு உறுதி செய்யும்” எனத் தெரிவித்தார்.

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், நோபல் பரிசுபெற்ற அமெரிக்கப் பொருளாதார நிபுணர் எஸ்தர் டப்ளோ, மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன், ராஞ்சி பல்கலைக்கழக டெல்லி ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் ஜீன் ட்ரெஸ், மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலர் நாராயணன் ஆகிய ஐவர் இந்தக் குழுவில் அங்கம் வகிப்பர்.

# உதய கம்மன்பிலவுக்கு எதிராக 8 தமிழ்க் கட்சிகள் ஓரணியில்!



**கொழும்பு, ஜூன் 22**

**வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் தீர்மானத்தை எட்டு தமிழ்க்கட்சிகள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டு வைத்துள்ள மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி மற்றும் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன பிரேரணையை ஆதரிக்க ஏற்கனவே முடிவெடுத்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளின் உத்தியோகப்பூர்வ முடிவு இன்னும் வெளியாகவில்லை என்ற போதிலும் ஆதரித்து வாக் களிக்கும் தீர்மானமே இன்று நடைபெறும் அக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேபோல கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான மக்கள் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியனவும் ஆதரவு நிலைப்பாட்டையே எடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிலவேளை வாக்கெடுப்பில் பங்கேற்காவிட்டாலும்கூட எதிர்த்து வாக்களிக்கும் நிலைப்பாட்டில் மேற்படி கட்சிகள் இல்லை.

இதேவேளை, ஆளுங்கூட்டணியிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. மற்றும் பிள்ளையானின் கட்சி வலுசக்தி அமைச்சருக்கு எதிரான பிரேரணையை எதிர்க்கவுள்ளன.



# 174 கிலோ கஞ்சாவுடன் இருவர் தொண்டைமானாறு கடலில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22

தொண்டைமானாறு கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றுக்காவல் நடவடிக்கையில் படகு ஒன்றில் கஞ்சா போதைப்பொருள் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 174 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடற்படையினரால் முற்படுத்தப்பட்டுள்ளனர். கஞ்சா போதைப்பொருளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ-2-3)

# மாகாண எல்லைகளை கடக்க அனுமதி இல்லை

கொழும்பு, ஜூன் 22

கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடையானது தற்போது தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்காக வரையறுக்கப்பட்ட அளவில் பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களினால் குறைந்த எண்ணிக்கையிலான பஸ் சேவைகள் இடம்பெறும் என்றாலும், அவை மாகாண எல்லைகளை கடக்க அனுமதி வழங்கப்படாது என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மாகாணங்களுக்குள் நேற்று முதல் சுமார் 17 ரயில் சேவைகள் திட்டமிட்டபடி இயங்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

அத்தியாவசிய சேவைகளுக்காக இதுவரை இயக்கப்படும் ஏனைய பொது போக்குவரத்து சேவைகள் எவ்விதமான மாற்றங்களும் இன்றி இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மகளின் திருமணத்தை பிரமாண்டமாக நடத்தவே ஹெரோயின் கடத்தினேன்!

## கைதான உப பொலிஸ் பரிசோதகர் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 22

"மகளின் திருமணத்தை ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் பிரமாண்டமாக நடத்துவதற்கான நிதியை திரட்டுவதற்காகவே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டேன்." - என்று பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சீருடையில் சுமார் 50 கோடி ரூபாய் பெறுமதியான 52 கிலோ ஹெரோயின் கடத்திய களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் உப பொலிஸ் பரிசோதகரே, பொலிஸ் விசாரணையின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

கைதாவதற்கு முன்னர்கூட இவர் கொழும்புக்கு 75 கிலோ ஹெரோயின் கடத்தியுள்ளார் எனவும், அதற்காக 20 இலட்சம் ரூபாய் பெற்றுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹெரோயின் கடத்திய உப பொலிஸ் அதிகாரி மட்டுமல்ல கடத்தப்பட்ட ஹெரோயினை பெறுவதற்காக காத்திருந்த இருவரும் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர். போதைப்பொருளுடன் பயணித்த இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பொலிஸ் அதிகாரியும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# சட்டவிரோத சூதாட்ட மையம் சுற்றிவளைப்பு; 14 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 22

மொறட்டுவை-மொறட்டுமுல்ல பகுதியில் தனிமைப் படுத்தல் விதிகளை மீறி சட்டவிரோதமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 பெண்கள் உள்ளிட்ட 14 பேரை மொறட்டுமுல்ல பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, சூதாட்டத்திற்கு பயன்படுத்திய ஒன்றரை இலட்சம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுமுல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# அதிகாலை முதல் வரிசையில் காத்திருந்த மதுப் பிரியர்கள்!

கொழும்பு, ஜூன் 22

கடந்த ஒருமாத காலமாக நாடு முழுவதும் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று காலை பயணத்தடை தளர்த்தப்பட்டது.

அத்தோடு, மதுபான நிலையங்கள் நேற்று முதல் திறக்கப்படுவதாகவும் மதுவரித் திணைக்களம் அறிவித்தது.

வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த மக்கள் பயணத்தடை தளர்த்தப்பட்டதும் தொழிலுக்குச் சென்று குடும்பங்களை கவனிப்பது உள்ளிட்ட பல்வேறு கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதைக் கடந்து மதுப்பிரியர்கள் காலை முதல் மதுபானச் சாலைகளின் வாசல்களில் காத்திருந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பெருமளவானோர் நேற்று வரிசையில் நின்று மதுபானங்களை கொள்வனவு செய்தமையை அவதானிக்க முடிந்தது. இளைஞர்கள் முதல் வயதானோர் வரை இவ்வாறு காத்திருந்து மதுபானங்களை கொள்வனவு செய்தனர்.

மதுபான நிலையங்களின் முன்பாக பொலிஸாரும் கடமையில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன், மதுபான நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மதுபானம் விநியோகிக்கப்பட்டது.

(அ)

# கடன் அட்டை மூலம் பணமோசடி; சீனப் பிரஜை உட்பட மூவர் கைது

கொழும்பு, ஜூன் 22

போலி கடன் அட்டையை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதில் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களில் ஒரு சீன பிரஜையும் உள்ளடங்குகிறரென அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்



தேக நபர்கள் கண்டி, வரக்காபொலை மற்றும் கல்கிஸையில் வசித்து வருபவர்கள் என அவர் மேலும் கூறினார்.

இணையவழி ஊடாக பொருட்கள் வழங்கும் நிறுவனம் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நபர்கள் கடந்த இரண்டு நாட்களுக்குள் 787,000 ரூபா மோசடி செய்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் இதன் போது குறிப்பிட்டார்.

(அ)



# கூட்டமைப்புடன் வெறும் தேர்தல் கூட்டுக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தயாரில்லை

## அருந்தவபாலன் அறிவிப்பு



**கிளிநொச்சி, ஜூன் 22**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெறுமனே தேர்தல் கூட்டுக்கு உடன்பட தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தயாரில்லை என அந்தக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய வினவுக்கே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் பேச்சுக்களை முன்னெடுக்கும் போது, அரசிடம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளை பெற்றுக்கொள்ளாது, தமிழர் உரிமைக்காக பேசுபவர்களையும் அழைத்து சென்று பேசுவதே பலமாக அமையும் என்று அவர் இதன்போது கூறினார்.

குறித்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர், இவ்வாறான கருத்தையே தங்கள் கட்சியின் தலைமையிலான கூட்டணியில் தற்போது உள்ள சுரேஷ் பிறேமச்சந்திரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தபோது முன்வைத்திருந்தார்.

தமிழ் அரசு கட்சி பங்காளிக் கட்சிகளை அழைத்துச் செல்வதில்லை என அவர் கூறி வந்திருந்தார். இந்த நிலையில் தற்போது நீங்கள் கூறும் விடயத்தை அவர்கள் ஏற்பார்களா என கேட்டார்.

அதற்கு பதிலளித்த அருந்தவபாலன்,

இந்த குற்றச்சாட்டு பொதுவாக இருந்தது. அதற்கு மக்கள் தகுந்த பதிலை வழங்கியுள்ளனர். தற்போது அது தொடர்பில் அவர்களும் வாய் திறந்துள்ளனர். ஆனாலும் தற்போது உள்ள சூழலில் அனைவரும் இணைந்து ஒரு பலமாக பேச்சுக்களில் ஈடுபடுவதே பொருத்தமானது என அவர் தெரிவித்தார்.

அண்மையில் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, அனைத்து கட்சிகளையும் இணைத்து மாகாண சபை தேர்தலில் போட்டியிட உள்ளதாக அழைப்பு ஒன்றை விடுத்திருந்தார். அது தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன என அவரிடம் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அருந்தவபாலன்,

தேர்தலுக்காக கூட்டு சேர்வதற்கு நாங்கள் தயாரில்லை. உண்மையாக மக்களுக்கு குரல் கொடுப்பதும், மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதும் எமது நிலைப்பாடு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மாத்திரமே நாங்கள் ஒரு பலம் பொருந்திய சக்தியாக இருப்போம் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

# போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 22

எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட விபத்தை தொடர்ந்து மீன் பிடிக்க முடியாமல் நாளாந்தம் இன்னல்களை அனுபவிப்பதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை பொலிஸார் தாக்கிய காணொலிகள் வெளியாகியுள்ளன.

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் நேற்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போதே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் மீன்பிடி நடவடிக்கை தடை செய்யப்பட்ட நிலையில் தமக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ள 5,000 ரூபாய் தமக்கு போதாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மீன்பிடி வலைகள் போன்ற சொத்துக்கள் இந்த நெருக்கடியால் அழிவடைந்துள்ள நிலையில் இதற்கு மட்டுமே 20,000 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# கொழும்பில் மற்றோர் இடத்திலும் டெல்டா வைரஸ் தொற்றுடன் ஒருவர்



கொழும்பு, ஜூன் 22

கொழும்பு, மதிவெலவின் பிரகதிபுர பகுதியில் வசிக்கும் ஒருவர் டெல்டா கோவிட் வைரஸ் திரிபு தொற்றுக்குள்ளா கினார் என சந்தேகிக்கப்படுவ தாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்து வர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அதனால் அந்தப் பகுதியில் கோவிட்-19 நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே கொழும்பு தெமட்டகொடை பகுதியில் கோவிட்-19 டெல்டா திரிபு தொற்றுக்குள்ளான ஐவர் இனங்காணப் பட்டுள்ளனர். (அ)

# 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இந்த மாதத்தில் இதுவரை தொற்று

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மொத்தம் 53 ஆயிரத்து 331 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்தும் கொவிட் கட்டுப்பாட்டு செயலணி நேற்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அதன்படி அதிகளவிலான நோயாளிகள் அதாவது கம்பஹாவில் 10 ஆயிரத்து 248 பேரும் கொழும்பில் 10 ஆயிரத்து182 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

களுத்துறையில் 5,096 பேருக்கும் இரத்தினபுரியில் 3,050 பேருக்கும் குருநாகலில் 2,979 பேருக்கும் காலியில் 2179 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

கண்டியில் 2146 பேருக்கும் மட்டக்களப்பில் 2054 பேருக்கும் நுவரெலியாவில் 1939 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 1724 பேருக்கும் கேகாலையில் 1368 பேருக்கும் மாத்தறையில் 1330 பதுளையில் 1304 பேருக் கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

# தம்பலகாமத்தில் கைக்குண்டு மீட்பு!

திருமலை, ஜூன் 22

திருகோணமலை-தம்பலகாமம்-பத்தினிபுரம் வயல் பகுதியில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் ஆடு மேய்க்கும் ஒருவர் ஆடு மேய்க்கச் சென்ற வேளையில் கைக்குண்டு கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரினால் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந்த கைக்குண்டு கடந்த யுத்த காலத்தின் போது விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டதா அல்லது வேறு யாருக்காவது சொந்தமானதா என்பது தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மணல் டிப்பர் மீது இராணுவம் சூடு!

## கிளிநொச்சியில் அதிகாலை சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி, புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீது படைத்தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது, கண்ணாடிச் சிதறல்களால் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

நாகேந்திரபுரம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி ஊடாக மணல் ஏற்றியபடி சென்ற வாகனத்தை படையினர் நிறுத்துமாறு தெரிவித்தனர் எனவும், இருந்த போதிலும் அதனையும் மீறி வாகனம் பயணித்தமையால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின்போது சாரதியின் உதவியாளர் கண்ணாடித் துகள்களால் காயம் அடைந்த நிலையில் தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாம் மணல் ஏற்றுவதற்கான அனுமதியுடனேயே பயணித்ததாகவும், இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் சாரதி தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா ஆடை தொழிற்சாலைக்கு பணிக்கு சென்றோரை தடுத்த மக்கள்!

வவுனியா, ஜூன் 22

வவுனியா ஈஸ்வரிபுரம் கிராமத்தில் இருந்து ஆடைத் தொழிற்சாலைக்கு பணிக்கு சென்றவர்களை ஊர் மக்கள் தடுத்து நிறுத்தியதுடன் அவர்களை ஏற்றிச்செல்ல வந்த பஸ்களையும் திருப்பி அனுப்பினர்.

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் ஈஸ்வரிபுரம் கிராமத்திலும் சிலர் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டனர்.

இந்நிலையில் கிராம மக்கள் ஆடைத்தொழிற்சாலைக்கு செல்பவர்களாலேயே தமது கிராமத்துக்கு கொரோனா தொற்று ஏற்படுவதாக தெரிவித்து தமது கிராமத்தில் இருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு சென்றவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதன் காரணமாக அவர்களை ஏற்றி செல்வதற்கு வருகைதந்த பஸ்கள் மீள ஆடைத்தொழிற்சாலைக்கு சென்றன.

இதனையடுத்து ஆடைத் தொழிற்சாலையில் இருந்து வருகை தந்தவர்கள் கிராம மக்களுடன் கலந்துரையடலில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும், மக்கள் உடன்பாட்டுக்கு வராத நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கலந்துரையாடியதுடன் வேலைக்கு செல்வதை எவரும் தடுக்கமுடியாது என தெரிவித்தனர்.

இந்நிலையில் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து வந்தவர்கள் கிராம மக்களை ஆடைத்தொழிற்சாலைக்கு வருகைதந்து மேலதிகாரிகளுடன் கதைக்குமாறு கோரியதுடன் இன்றில் இருந்து அனைவரையும் பணிக்கு வருமாறும் தெரிவித்தனர்.

இதனையடுத்து கிராம மக்கள் கலைந்து சென்றதுடன் ஆடைத்தொழிற்சாலைக்கு பணிக்கு செல்பவர்களும் நேற்று வீடுகளுக்கு சென்றிருந்தனர்.

# மட்டக்களப்பில் இராணுவத்தினரின் பஸ்ஸும் பிக்கப்பும் மோதி விபத்து!

மட்டக்களப்பு, ஜூன் 22

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் இராணுவத்தினரின் பஸ்ஸும் பிக்கப் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

இராணுவத்தினர் எவருக்கும் எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்றபோதிலும் பிக்கப்பும் பஸ்ஸும் சேதடைந்துள்ளன.

விபத்துக்குள்ளான இராணுவத்தினரின் பஸ் கோவிட் தொற்றாளர்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாக தெரியவருகிறது.குறித்த பகுதிக்கு வந்த இராணுவபொலிஸாரும் பொலிஸாரும் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இணைய வசதியற்ற மாணவர்களுக்காக விரைவில் பிராந்திய கற்றல் மையங்கள்!

## கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தகவல்

கொழும்பு, ஜூன் 22

**பல்வேறு காரணங்களால் இணைய வசதிகளைப் பெற முடியாத மாணவர்களுக் காக பிராந்திய கற்றல் மையங்களை நிறுவ கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.**

நாரஹேன்பிட்டியில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

பிராந்திய கற்றல் மையங் களை அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. கற்றல் நிலையங்களின் தேவைப்பாடு குறித்து மாகாண கல்வித் திணைக்களங்களுடன் கடந்த வியாழக்கிழமை ஆராயப்பட் டது எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பிராந்திய கற்றல் மையங் களை காலை 07:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை இயக்க திட்டமிடப்பட்டுள் ளது. இந்த மையங்களில் கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் குறைந்தது 10 கை கணனிகள் (tablet) இருக்கும் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.



# பிரதமரும் பாரியாரும் யோகா பயிற்சியில்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வும் அவருடைய பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும், யோகாச னம் செய்யும் புகைப்படம் ஒன்று, இலங்கைக்கான இந் திய தூதரகத்தின் உத்தியோக பூர்வ ருவிட்டர் தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

"உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக யோகாவை மாற்று வதைக் காண்பதற்கு மில்லியன் கணக்கான யோகா ஆர்வலர் கள் தொடர்ந்து ஆர்வமாக இருப்பார்கள்" என்றும் அப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

உருத்திரபுரம் பெண் கொலை

# சந்தேக நபர்கள் இரண்டு பேர் 03 மாதங்களின் பின் சிக்கினர்!

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி மாவட்டம் அம்பாள் குளத்திலிருந்து சடல மாக மீட்கப்பட்ட உருத்திர புரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 3ஆம் மாதம் ஒன்பதாம் திகதி அம்பாள் குளத்திலிருந்து பெண் ஒருவ ரின் சடலம் காணப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட விசாரணையில், கணவனால் கைவிடப்பட்ட குறித்த பெண் 37 வயதான காமராஜ் திலகேஸ்வரி என்றும் அவருக்கு 03 வயதில் ஒரு குழந்தை இருப்பதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்திருந்தது.

இருந்தபோதிலும் குறித்த பெண் எவ்வாறு கொலை செய் யப்பட்டார், யாரால் கொலை செய்யப்பட்டார் போன்ற விவ ரங்கள் தெரியவந்திருக்க வில்லை.

கிளிநொச்சிப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் குறித்த பெண் ணின் மரணம் தொடர்பில் கிளிநொச்சி முறிப்பு பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று கிளி நொச்சி பொலிஸாரால் சந் தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் 1980ஆம் ஆண்டு பிறந்தவர் என்றும் மற்றையவர் 1997 ஆம் ஆண்டு பிறந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இன்று அவர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிமன் றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

(அ)

போதைப்பொருள் கும்பலுடன் தொடர்பு:

# போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் மூவருக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 22

போதைப்பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்ட கும்பல்களுடன் கூட்டணி அமைத்து செயற்பட்டு வந்த குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டிருந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் மூவ ருக்கு விளக்கமறியல் நீடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த மூவரும், ஒன்றரை ஆண்டுகளாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தி னால் தடுத்து வைக்கப்பட்டி ருந்தனர்.

இந்த நிலையில், இவர்கள் தொடர்பான வழக்கு, கொழும்பு பிரதம நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல முன்னிலை யில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் களை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சார்ஜன்ட் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவரும் இவ் வாறு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், முன்னதாக கைதுசெய்யப்பட் டிருந்த போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் 15 பேர் உட்பட 20 பேரும், விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எரிபொருள் விலையை அதிகரித்து மக்களின் கழுத்தை நெரிக்கும் அரசு

## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, ஜூன் 22

"பெரும் கொரோனா நோய்த் தொற்று நிலை மைக்கு மத்தியில் எரிபொருளின் விலையை அதிகரித்து மக்களின் கழுத்தை அரசு நெரிக்கின் றது. இதன்மூலம் அரசின் மனிதாபிமானமற்ற தன்மை வெளிப்படுகின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த ஆட்சிக் காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், உலக சந்தையில் எரிபொருளின் விலை பெருமள வில் குறைவடைந்த 2020ஆம் ஆண்டில் அதன் அனுகூலம் மக்களுக்குக் கிடைத்திருக்கும்.

உலகின் மிகவும் அபாயகரமான தொற்று நோயை நாடு எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில், எரிபொருளின் விலையை அதிகரிக்காமல் மக்க ளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசு செயற் பட்டிருக்க வேண்டும்.

எரிபொருளின் விலை அதிகளவில் அதிகரிக் கப்பட்டதை அடுத்து, நாட்டில் அனைத்துத் துறைகளிலும் விலையேற்றம் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது" - என்றார்.

(இ)

# கொரோனா தொற்றில் இருந்து மேலும் 1,898 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூன் 22

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்றுவந்த 1,898 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந் தோரின் மொத்த எண்ணிக்கை 207,287ஆக அதிகரித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# துறைமுக அதிகார சபையின் தலைவராக கப்டன் நிஹால் கெப்பெட்டிபொல நியமனம்

கொழும்பு, ஜூன் 22

துறைமுக அதிகார சபை யின் தலைவராக கப்டன் நிஹால் கெப்பெட்டிபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நியமனக் கடிதத்தை நிஹால் கெப்பெட்டிபொலவுக்கு வழங்கி வைத்துள் ளார்.

நிஹால் கெப்பட்டிபொல ஹார்பர் மாஸ்டராக வும், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முகா மைத்துவ பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



# அபிவிருத்தி லொத்தர் சபைக்கு புதிய தலைவராக பெல்பிட்ட

கொழும்பு, ஜூன் 22

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டுள் ளார்.

கைத்தொழில் அமைச்சின் செயலாளராக பணியாற்றிய அனுஷ பெல்பிட்ட, அண்மை யில் ஓய்வுபெற அனுமதி கோரி ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

தற்போதைய அரசு ஆட் சிக்கு வந்த பிறகு, அவர் கைத் தொழில் அமைச்சின் செயலா ளராக நியமிக்கப்பட்டார்.





# இறந்து கரையொதுங்கும் கடல் உயிரிகளும் மீன்களை உணவாக சாப்பிடுதலும்

**கடல் மாசுபடும்போது, இரசாயனப் பொருட்களிலுள்ள பாரமான உலோகங்கள் கடலில் பரவும். இதனால், மீன்களின் உணர்திறன் பாதிக்கப்படும். உணவுகளை கண்டுபிடிப்பதிலும், வேட்டை விலங்குகளை உணர்ந்து தப்பிப்பதிலும் சிக்கல்களையும் மீன்கள் எதிர்நோக்கும்.**

ஏ.எம். றியாஸ் அகமட்

சமீபகாலமாக நூற்றுக்கணக்கான கடல் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவது பல்வேறு தரப்பினர்களின் கவனத்தை ஈர்க்கும் நிகழ்வாக இருந்து வருகின்றது. இவ்வாறு இந்த உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நோய்த் தொற்று, காலநிலை மாற்றம், பிழையான அல்லது சட்டவிரோதமான மீன்பிடிமுறைகள் (டைனமைட், சயனைட் மீன்பிடி முறைகள்), இயந்திரப் படகுகள், கப்பல்களிலிருந்து தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ அல்லது நோக்கமாகவோ கொட்டிவிடப்படும் இரசாயனப்பொருட்கள், விபத்துக்கள், கடலின் அடித்தளத்தில் புதைக்கப்படும் இரசாயன அணுக்கழிவுகள், இரசாயனக் கழிவுகள், ஆயுதங்களை பாவித்தல் அல்லது ஆயுதங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் போன்றவைகளை, பல காரணங்களில் சில காரணங்களாக கூறலாம்.

இவைகளுக்கு எவை சமீபகால கடல் உயிரிகளின் இறப்புகளுக்கு காரணங்களாக இருக்கலாம்?

1) நோய்கள் காரணங்களாக இருந்தால், அவைகளுக் குரிய அறிகுறிகள் இறந்து கரையொதுங்கிய உயிரினங் களில் காணப்பட்டிருக்க வேண்டும்.
2) காலநிலை மாற்றம் காரணம் என்றால், சமுத்திரங்களின் மேற்பரப்பு நீரோட்டம், கீழிருந்து மேலான நீரோட்டம், வெப்பநிலை, காற்றின் வேகம், புவியீர்ப்புவிசை, உவர்த்தன்மை, கரையக்கூடிய ஒட்சிசன் அளவு, அலையுயிரிகளின் அடர்த்தி, கடல் உயிரிகள் வாழும் பகுதிகள் (மேற்பகுதி, நடுப்பகுதி, மேற்பகுதி), பிரதிநிதி உயிரினங்கள் (indicator species) போன்ற வைகளில் மாற்றங்கள் காணப்பட்டிருக்க வேண்டும். அவைகளை நேர்மையான நடுநிலையான, நிபுணர்களும், ஆய்வாளர்களும் (நிறையப்பேர் இருக்கிறார்கள்) அறிவித்திருக்க வேண்டும்.
3) நீலப்பச்சை அல்கா நஞ்சாதல், பிழையான மீன்பிடி முறைகள், கடல்நீர் வெப்பநிலை திடீரென அதிகரித் தல், குறைதல் போன்றவைகள் காரணங்களாக இருந்தால், அவையும், இறந்தொதுங்கிய உயிரிகளில் காணப்பட்டிருக்க வேண்டும். காணப்பட்டால் அறிவித்திருக்க வேண்டும்.
4) நிலக்கீழ் ஆயுதப் பாவனை அல்லது பரீட்சிப்பு நடந்திருக்க வாய்ப்பில்லை.
5) எது காரணம்? அல்லது எவை காரணங்கள்?

i) பொறுப்பு வாய்ந்த அமைச்சர், கடல் கொந்தளிப்பான காலங்களில் இதெல்லாம் ‘சகஜம்’ என்றும்,
ii) அதற்கடுத்த நிலையிலுள்ள நிறுவனத் தலைவர்கள், நீங்கள் நினைக்கும் காரணங்களுக்கு இன்னும் ஆதாரம் இல்லை. வேறு காரணங்களும் இருக்கலாம். இருந்தும் மாதிரிகள் அனுப்பியிருக்கிறோம். வரட்டும் பார்ப்போம் என்றும்,
iii) நடுநிலையான நேர்மையான அதிகாரிகளும், ஆய்வாளர்களும், இறந்த மீன்களின் சமிபாட்டுத் தொகுதிக்குள்ளும், பூப்பிளவுகளுக்குள்ளும், நுண்பிளாஸ்ரிக் பொருட்கள் காணப்படுகின்றன. இறந்த உயிரினங்களில் எரிகாயங்கள் காணப்படுகின்றன. ஆகவே , “நீங்கள் நினைக்கும் காரணங்கள்தான்” சரி என்றும்,
iv) சூழலியலாளர்களும், கல்வியலாளர்களும், ஊடகவியலாளர்களும் உண்மை என்றால் ஒன்றுதான். அந்த உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். நாற்பது வருடங்களில் கூட, இந்த கடற்சூழற்றொகுதிக்கு ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்யமுடியாது. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றும்,
v) திருவாளர் மக்களோ, ஆமை இறந்தாலும் பிரச்னையில்லை. டொல்பின் இறந்தாலும் பிரச்னையில்லை. கடலில் பிளாஸ்ரிக் இருந்தாலும் பிரச்னை இல்லை. கடலில் நஞ்சு இருந்தாலும் பிரச்சினை இல்லை. சாப்பாடு முக்கியம். மீன் சாப்பிடலாமா? இல்லையா? என்றும், வெவ்வேறான நிலைப்பாடுகளில் இருக்கிறார்கள்.

**கடல் ஆமைகள்**

நூற்றுக்கணக்கில் மீன்கள் தவிர்த்து, வேறு உயிரினங்கள் இறந்து கரையொதுங்கத் தொடங்கியுள்ளன. இவைகள் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? எல்லா உயிரினங்களையும் வைத்து விளக்கங்கொடுப்பதற்கான விரிவஞ்சி கடலாமைகளை உதாரணமாக எடுக்கின்றேன்.

உலகில் ஏழு கடலாமை இனங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் அபாயத்தின் விழிம்பிலிருப்பவை. இலங்கையில் ஐந்து இனங்கள் காணப்படுகின்றன. கடலாமைகள் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் பிரயாணம் செய்யும். கடற்கரையில் மடுதோன்றும். நூற்றுக்கணக்கான முட்டையிடும். சென்றுவிடும். பின்னர் முட்டைகள் குஞ்சுபொரிக்கும். தங்கள் பெற்றோரை தனியே தேடி சென்றடைந்துவிடும். இதற்கு அவைகளின் உடலில் கட்டமைக்கப்பட்டுள்ள ஜீ.பி.எஸ் நடற்றொழில்நுட்பத்தை பாவிக்கும். ஆயிரம் குஞ்சுகளில் ஒரு குஞ்சே, வேட்டையாடிகள், நீரோட்டம், காலநிலைக் காரணிகள் போன்றவைகளிலிருந்து தப்பித்து இவ்வாறு பெற்றோரிடம் சேர்ந்துவிடும்.

**மையக்கல் இனங்கள்**

சூழற்றொகுதியிலுள்ள இனம் ஒன்றை அகற்றும்போது, அது முழுச் சூழற்றொகுதியையும் பாதிக்கச் செய்யும். இவ்வாறான இனங்கள் மையக்கல் இனங்களாகும் (Keystone species). உதாரணம் - ஆல மரங்களை அகற்றினால், பறவைகள் போன்ற பல்வேறு உயிரிகளின் பல்வகைமை குறையும். இதுபோல ஆழ்கடலில் சுறாக்களையும் குறிப்பிடலாம். யானை, கடல்நாய், கரடி, போன்ற உயிரிகளளை இதற்கு உதாரணங்களாக கூறலாம்.

கடலாமைகளானது மையக்கல் இனங்களாகும். இந்த இனங்கள் கடற்சூழற்றொகுதியின் நிலவுகைக்கும், ஆரோக்கியத்திற்கும், மற்றைய விலங்குகளின் இருக்கைகளுக்கும் முக்கிய பங்காற்றுகின்றன. கடற்புற்களும், தாவரங்களும் அதீதமாக பெருகாமல் அவைகளை உணவாக உட்கொண்டு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. ஹொவ்க்பில் கடலாமைகள் வேகமாக வளருகின்ற முருகைக் கற்களையும், கடற்பஞ்சுகளையும் உணவாகக் கொள்வதனாலேயே, மெதுவாக வளர்கின்ற முருகைக்கற்பாறைகள் மேல் இவைகள் படர்ந்து மூடுவது தடுக்கப்பட்டு அவைகளை இறப்பிலிருந்து காப்பாற்றுகின்றன. அத்துடன், ஜெல்லிமீன்களின் பரவுகைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.



கடலாமைகள் கடற்புற்களை தொடர்ச்சியாக உண்ணுவதன் காரணமாக, அவைகளின் வளர்ச்சி வீதம் கட்டுக்குள் வைக்கப்பட்டு, கடற்புற் சூழற்றொகுதியின் ஆரோக்கியமும், உற்பத்தித்திறனும் பேணப்பட உதவுகின்றன. இதன் காரணமாக போசணைப்பொருட்கள், கடலிலிருந்து போசணைப் பொருட்கள் குறைந்த கரைப்பகுதிக்கு செல்கின்றன. இது கரையோர உயிரினங்களின் தப்பிப் பிழைத்தலுக்கு மிக அவசியமாகும். கரையோரச்சூழற்றொகுதியின் கட்டுறுதிக்கும் அவசியமானதாகும். இந்த போசணைப் பொருட்களாலேயே, நெய்தல் வலய தாவரங்களும், மண்மேடு தாவரங்களும் வளர்கின்றன. ஆமைகள் அழியும்போது, இந்த தாவரங்களும் அழிந்து, மண்ணரிப்பு ஏற்பட்டு, கடல் இலகுவாக இந்தப் பகுதிகளை உள்வாங்கும்.

எனவே கடலாமை என்ற ஒரு உயிரியின் முக்கியத்துவம் எவ்வாறு முழுச் சூழற்றொகுதிக்கும் முக்கியம் என்பதை நீங்கள் உணர்வதைப்போலவே, மற்றைய உயிரிகளும் சூழற்றொகுதியின் நிலவுகைக்கு முக்கியம் என்பதை உணர வேண்டும்.

**மீன்களை சாப்பிடலாமா?**

கடல்மாசுபடும்போது, இரசாயனப் பொருட்களிலுள்ள பாரமான உலோகங்கள் கடலில் பரவும். இதனால் மீன்களின் உணர்திறன் பாதிக்கப்படும். உணவுகளை கண்டுபிடிப்பதிலும், வேட்டை விலங்குகளை உணர்ந்து தப்பிப்பதிலும் சிக்கல்களையும் மீன்கள் எதிர்நோக்கும். மாசடைவதால், பரவிய நுண்ணிய பிளாஸ்ரிக் பொருட்கள், நஞ்சுப் பொருட்களை உறிஞ்சி வைத்திருக்கின்ற, பஞ்சு போன்றது. இவைகளை மீன்கள் சாப்பிடும். மீன்களை பறவைகளும், சீல்களும், மனிதர்களும் சாப்பிடுவார்கள். இதனால் நஞ்சுகள் எல்லோருக்கும் பரவும்.

அதுபோலவே கடற் தாவரங்களை இறக்கச் செய்யும். அதன் காரணமாக ஒளித்தொகுப்பு குறைந்து, ஒட்சிசன் குறைந்து கடல்உயிரிகள் இறக்கும். அத்துடன் தாவரவுண்ணிகள் உணவுப்பொருட்கள் சாப்பிடுவதற்கு கிடைக்காது, பட்டினியினாலும் இறக்கும். நுண்ணிய பிளாஸ்ரிக் பொருட்கள், உக்க முடியாததவை. அவைகளை உண்ணும் மீன்களின் உணவுத் தொகுதியில் இவை சமிபாடடையாது, பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி மீன்களை இறக்கச் செய்யும்.

மீன்களை உண்ணுதல் மீன்பிடியுடன் சம்பந்தப்பட்டது. கடல் மீன் பிடி என்பது 350,000 மீனவர்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சீவனோபாய முறை. வருமானத்தை பெற்றுத் தரும் முறை. அத்துடன் இலங்கையின் புரதத்தை பூர்த்தி செய்வதில் முக்கியமானது. உணவுப் பாதுகாப்புக்கும் மிக முக்கிய பங்காற்றுவது. எனவே மீன்களை உண்ணலாமா? உண்ணக்கூடாதா? என்பதை, ஆய்வுகளும், அறிக்கைகளும் ஊடாகவே அரசாங்கம் அறிவிக்க வேண்டும். அதுதான் தற்போதைய நிலையில் மிக உசிதமானதும் கூட.

கட்டுரையாளர் சிரேஸ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஈழநாடு



> **ஈரானில் உட்சபட்ச அதிகாரம் கொண்ட அதி உயர் தலைவர் பதவிக்கு தனக்கு அடுத்த ஒருவரை தெரிவு செய்வதற்கு 82 வயதாகும் ஆயத் துல்லா அலி காமனெயி முன்னுரிமை கொடுத்து வருவதாகவும், இப்ராஹிம் ரையீசியே அவரது தேர்வாக இருக்க வாய்ப்புள்ளதாகவும் வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளது.**






# ஈரான் புதிய ஜனாதிபதியின் பின்புலம் என்ன? அடுத்த அதி உயர் தலைவர் ஆவாரா ரையீசி?

ஈரானில் ஜூன் 18ஆம் திகதி நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அந்நாட்டின் நீதித்துறை முன்னாள் தலைவர் எப்ராஹீம் ரையீசி வெற்றிபெற்றுள்ளார். இதன் மூலம் ஈரானின் 13ஆவது ஜனாதிபதியாக அவர் பதவியேற்க உள்ளார்.

ஹோஜ்ஜத் அல்-இஸ்லாம் சையத் எப்ராஹீம் ரையீசி 1960ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி வடகிழக்கு ஈரானின் மஷாத்தில் பிறந்தார்.

நவீன ஈரானின் பழமைவாதிகளில் முக்கியமானவராக அறியப்படும் ரையீசி, மஷாத் நகரில் உள்ள எட்டாவது ஷியா இமாம் ரேஸாவின் புனித ஆலயமும் அந்த நாட்டின் மிகவும் வளமான சமூக அமைப்பான அஸ்தான்-இ-குத்ஸின் புரவலராகவும் இருந்துள்ளார்.

ரையீசி எப்போதும் ஒரு கருப்பு தலைப்பாகை அணிந்துகொள்வதை வழக்கமாக கொண்டுள்ளார். இது ஷியா முஸ்லிம்களின் இறைத்தூதர் முகமது சயீத்தின் வழித்தோன்றல் என்பதைக் குறிக்கிறது.

இதுமட்டுமின்றி, ஈரானில் உட்சபட்ச அதிகாரம் கொண்ட அதி உயர் தலைவர் பதவிக்கு தனக்கு அடுத்த ஒருவரை தெரிவு செய்வதற்கு 82 வயதாகும் ஆயத்துல்லா அலி காமனெயி முன்னுரிமை கொடுத்து வருவதாகவும், இப்ராஹிம் ரையீசியே அவரது தேர்வாக இருக்க வாய்ப்புள்ளதாகவும் வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஈரானிய தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை உறுதிசெய்யும் கார்டியன் கவுன்சில், தனது சமீபத்திய நடவடிக்கையின் மூலம், பெரும்பாலான சீர்திருத்த அல்லது மையவாத வேட்பாளர்கள் இந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடுவதை தடுத்துள்ளது.

குறிப்பாக, ஈரானிய பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் அலி லாரிஜானியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட போதே ரையீசியின் வெற்றி ஏறக்குறைய உறுதியாகிவிட்டதாக சி.என்.என். தொலைக்காட்சி செய்தி வெளியிட்டிருந்தது.

ஈரானின் அதி உயர் தலைவர் காமனெயி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தேர்வு செய்யும் கார்டியன் குழுவில் தனக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, சவால் அளிக்கக்கூடிய வேட்பாளர்களை நிராகரித்ததன் மூலம் தனது விருப்பத்திற்குரியவருக்கு உதவியதாக பாபி கோஷ் ப்ளூம்பெர்க்கில் வெளியான கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

ஈரானின் அதி உயர் தலைவராவதற்கு முன்பாக இரண்டு முறை நாட்டின் ஜனாதிபதியாக ஆயத்துல்லா அலி காமனெயி பதவி வகித்திருந்தார். இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் ஈரானின் அதி உயர் தலைவர் ஆவது என்பது ரையீசிக்கு எளிதான பாதையாக மாறியுள்ளதாக கருதப்படுகிறது.

இதுமட்டுமின்றி, காமனெயியின் மிகவும் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக விளங்கும் ரையீசி, தற்போதைய அதி உயர் தலைவரை போன்றே இஸ்லாமிய நீதி அமைப்பு முறையை முன்னிறுத்தி நாட்டையும் அரசாங்கத்தையும் ஆள்வார் என நம்பப்படுகிறது.

ஈரானுக்கு அந்நிய முதலீடு தேவையில்லை என்றும், அமெரிக்காவுடனான பேச்சுகளை முன்னெடுத்து செல்லக்கூடாது என்றும் ரையீசி நம்புகிறார். எனினும், பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்காக அமெரிக்காவுடனான பேச்சுகளை காமனெயி ஆதரித்தார். இதற்குப் பிறகு ரையீசியும் அதை ஆதரித்தார்.

அதே சூழ்நிலையில், ஈரானின் அடுத்த அதி உயர் தலைவர் பற்றிய வதந்திகளுக்கு ரையீசி இதுவரை எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஈரானில் அதி உயர் தலைவரே நாட்டின் மிகப்பெரிய மத மற்றும் அரசியல் அதிகாரம் கொண்டவராக கருதப்படுகிறார். அவர் நாட்டின் இராணுவத் தளபதியாகவும் செயல்படுகிறார்.

ஈரானின் நீதித் துறையில் ரையீசி பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளதுடன், நாட்டின் அதி உயர் தலைவரை தேர்ந்தெடுக்கும் நிபுணர் குழுவின் உறுப்பினராகவும் பின்னர் தலைவராகவும் இருந்துள்ளார்.

1988ஆம் ஆண்டில் தெஹ்ரான் இஸ்லாமிய புரட்சி நீதிமன்றத்தின் வழக்குரைஞராக ரையீசி பணியாற்றிய போது, அவர் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பு ஆணையத்தின் உறுப்பினராகவும் இருந்தார். அந்த ஆணையம் அதிக அளவிலான இடதுசாரி தலைவர்கள், அரசியல் கைதிகள் மற்றும் அதிருப்தியாளர்களை தூக்கிலிட உத்தரவிட்டது. இந்த சம்பவத்திற்குப் பிறகு, ஈரானில் ரையீசியின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியது.



இதைத் தொடர்ந்து கடந்த 2017ஆம் ஆண்டு நடந்த ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 38.5 சதவீத வாக்குகளை மட்டும் பெற்று ஹசன் ரூஹானியிடம் ரையீசி தோல்வியுற்றார். எனினும், 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரை நீதித் துறை தலைவராக அதி உயர் தலைவர் காமனெயி நியமனம் செய்தார்.

அதே ஆண்டு நவம்பர் மாதத்தில், ரையீசி உள்பட எட்டு பேர் மீது அமெரிக்க அரசு தடை உத்தரவுகளை பிறப்பித்தது.

இவர்கள் அனைவரும் ஈரானின் அதிஉயர் தலைவர் ஆயத்துல்லா அலி காமனெயியிக்கு நெருக்கமானவர்கள் என்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்றும் அமெரிக்கா காரணம் கூறியது என்பது குறிப்பிடத்தக்கது.

**- பி.பி.சி. தமிழ்.**

ஈழநாடு

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

கல்வி tv CHANNEL

## இல - 6 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 1 | 21. 2 | 31. 2 |
| 2. 3 | 12. 1 | 22. 3 | 32. 2 |
| 3. 3 | 13. 1 | 23. 3 | 33. 2 |
| 4. 1 | 14. 3 | 24. 1 | 34. 1 |
| 5. 3 | 15. 1 | 25. 2 | 35. 2 |
| 6. 1 | 16. 2 | 26. 2 | 36. 2 |
| 7. 3 | 17. 3 | 27. 3 | 37. 3 |
| 8. 3 | 18. 3 | 28. 2 | 38. 2 |
| 9. 2 | 19. 2 | 29. 3 | 39. 2 |
| 10. 1 | 20. 2 | 30. 1 | 40. 3 |

## இல - 6 வினாத்தாள் - II விடைகள்

01.
- i. திறந்த வெளிகளில்
- ii. கூர்மையான கல் / கூரிய கல்
- iii. சித்திரங்கள்
- iv. வாசித்து
- v. தன் + காப்பு
- vi. எழுதுகோல்களை

02.
- i. X
- ii. ✓

03.
- i. வானவில்
- ii. அழைப்பிதழ்

04.
- i. காடு செல் / காட்டுக்குச் செல்
- ii. பொய்க்கதைகளை

05. தே இலங்கும் தலம் இலங்கும் சீர் இலங்கும்

06. தவளை

07.
- i. விரும்புகின்றோம்
- ii. வருகின்றார்கள்

08.
- i. ஒத்திகை
- ii. வெள்ளோட்டம்

09.
- i. மரம், செடி, கொடி என்பவற்றின் மூலம் கிடைக்கும் பயன்களைத் தருக.
- ii. " அவர் என்னைப் பார்த்து உனது பெயர் என்ன?" எனக் கேட்டார்.

10.
- i. வானத்தில் பறவைகள் பறந்தன
- ii. வீரன் அரண்மனையை நோக்கிச் சென்றான்
- iii. நாளை மாமா எங்கள் வீட்டிற்கு வருவார்.

11.
- i. are
- ii. will

12.
- i. நான் வகுப்பிற்கு வந்து கொண்டிருக்கின்றேன்
- ii. தயவு செய்து ஒவ்வொரு நான் பாடசாலைக்கு வாருங்கள்

13.
- i. மம ஆப்பன சாலாவ யன்னத?

14. கொக்கு

15. ஒயா கீ வெனி பந்தியேத?

16. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.

17. பதினாராயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு

18. 2045

19. XVIII

20.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| அப்பியாசக்கொப்பி | 4 | 33 | 00 | 132 | 00 |
| பிஸ்கட் பொதி | 5 | 22 | 00 | 110 | 00 |
| அடிமட்டம் | 4 | 12 | 00 | 48 | 00 |
| மொத்தம் | | | | 290 | 00 |

21. 1582

22.
- i. 180
- ii. ரூபாய் 5400.00

23. 59

24. 157

25. ரூபாய் 25.00

# கொரோனா தரவுகளை மாற்றி அரசை கவிழ்க்க சதிமுயற்சி

## ஒழுக்காற்று விசாரணை என்கிறார் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண

கொழும்பு, ஜூன் 22

**“நாட்டில் கொரோனா வைரஸ் தரவுகளை மாற்றி அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். கொரோனா வைரஸ் பரவுதல் தொடர்பாக பிழையான தரவுகளை வழங்கியவர் மீது ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.”**

- இவ்வாறு ஔடதங்கள் தயாரிப்பு விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் நூற்றுக்கு மூன்று, நான்கு வீதமான சதிகாரர்கள், நாசக்காரர்கள் இருக்கின்றனர். அந்த நூற்றுக்கு மூன்று நான்கு வீதமானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புடன் பதவிகளுக்கு வரும் போது, சில நேரங்களில் எண்களை மாற்றுவதன் மூலம் அரசைக் கவிழ்க்க முடியும் என நினைத்து பணியாற்றியதாக இருக்க வேண்டும். இது தொடர்பாக எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தவறிழைத்ததாக நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்க எதிர்பார்க்கின்றோம்” - என்றார்.

இதனிடையே, நோய் குறித்த தரவுகளுடன் தொடர்புடைய சதிக் குற்றச்சாட்டு தொடர்பில் அரச மருத்துவ சங்கம் கருத்துத் தெரிவித்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கூறியதாவது:-

“இது சூழ்ச்சி சேர் என கொரோனா குழுவில் ஒருவர் கூறினார். மறுநாள் சூழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. சதிகாரரே, சதி எனக் கூறினார். அனில் ஜாசிங்கவை இரண்டு மாதங்கள் வீட்டுக்கு அனுப்பினர். பின்னர், இரண்டு மாத இடைவெளியில் பலிக்கு எவரையேனும் தேடுகின்றனர். இறுதிப் பலியே, தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர. இங்கு, உலகத்துடனான தரவுக் கடத்தல் உள்ளது. தரவுகளைத் திருடி எமது தொழிற் சங்கம் விற்கின்றது. சதியில் ஈடுபட்டது யார்? இது சர்வதேச



தரவுக் கடத்தல். விற்க முடியும்.

இந்தத் தரவுகள் சுதத் சமரவீரவிடம் இருந்தபோது தமக்கு வழங்குமாறு தொழிற்சங்கம் கோரியது. அவர் வழங்கவில்லை. வழங்காமைக்கான பிரதிபலனையே இன்று அவர் அனுபவிக்கின்றார்.

இந்த நாட்டின் மக்கள் உயிரிழப்பார்களாயின், அதனைத் தடுப்பதற்கு ஏதேனும் வேலைத் திட்டமொன்று இருக்க வேண்டும். அவ்வாறன்றி, சதிகாரர்கள் சதிகாரர்கள் எனக் கூறி பிரச்னையைத் தீர்க்க முடியாது” - என்றார். (இ)

# இரு நாட்கள் மாத்திரமே பாராளுமன்றம் கூடும்!

கொழும்பு, ஜூன் 22

பாராளுமன்ற அமர்வு இவ்வாரம் இரு நாட்கள் மட்டுமே நடைபெறும்.

இதன்படி இன்றும், நாளையும் சபை அமர்வுகளை முன்னெடுப்பதற்கு நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போதே சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி சபை நடவடிக்கைகளை இரு நாட்களுக்கு முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

# ‘காஸ்’ விலை உயர அனுமதிப்பதில்லை

## அமைச்சரவை உப குழு தீர்மானம்



கொழும்பு, ஜூன் 22

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதிப்பதில்லை என அமைச்சரவை உப குழு தீர்மானித்துள்ளது.

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கோரிக்கை விடுத்திருந்தன. இது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவே மேற்படி முடிவை எடுத்துள்ளது. (இ)

# நாடு திரும்பிய கையோடு ‘மொட்டு’வின் முக்கிய பிரதிநிதிகளுடன் பஸில் பேசுவார்

கொழும்பு, ஜூன் 22

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் விசேட கூட்டம் இவ்வாரம் நடைபெறவுள்ளது எனவும், அதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன எனவும் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமெரிக்கா சென்ற ‘மொட்டு’ கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ, நாளை நாடு திரும்புவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அவர் கொழும்பு வந்த பின்பே இந்தக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

கட்சியின் எதிர்கால அரசியல் நகர்வுகள், பங்காளிக் கட்சிகளால் பிரயோகிக்கப்படும் அரசியல் அழுத்தங்கள் உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜ



பக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பஸில் கலந்துரையாடுவார் எனத் தெரியவருகின்றது. (இ)

# மேலும் 844 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 22

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 844 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப் பிட்டடார்.

இதையடுத்து கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 41 ஆயிரத்து 518 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாட்டில் அமுலில் இருந்த பயணக்கட்டுப்பாடு நேற்று அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டது. விசேட பாதுகாப்பு வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். புலனாய்வாளர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர். (இ)

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணையை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரிக்குமா?

## முடிவு இன்று என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 22

“எரிபொருள் விலையேற்றத்தை மையமாக வைத்து அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பாக இன்று இடம்பெறும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்படும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எரிபொருள்களின் விலைகளை திடீரென அதிகரித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசின் தீர்மானத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அரசின் இந்த முடிவு நாட்டு மக்களை மேலும் கஷ்டப்படுத்தும் செயலாகும்.

இந்நிலையில், எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வருகின்றது.

இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமானால் அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்குமா? இல்லையா? என்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக்



குழுவே கூடித் தீர்மானிக்கும்.

இந்தப் பிரேரணையை ஆதரிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை எம்மிடம் கேட்டுக்கொண்டது. அவர்களுக்கும் நாம் மேற்படி பதிலையே கூறினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்” - என்றார். (இ)

# 1,972 பேரின் உயிரை பறித்த 3ஆம் அலை!

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் இதுவரை 1,972 பேர் பலியாகினர் என்று கொரோனாத் தடுப்புச் செயல்பாட்டு மையம் நேற்றுக் காலை வெளியிட்டிருந்த தரவுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் கொரோனாவின் முதலாவது அலையின் 13 மரணங்களும், இரண்டாவது அலையில் 596 மரணங்களும் பதிவாகின.

அதேவேளை, கொரோனாவால் நாட்டில் பலியானவர்களின் எண்ணிக்கை 2,581 ஆக அதிகரித்துள்ளது. (இ)



ஈழநாடு



# அணு ஆயுத விற்பனைக்காகவே கொள்கையை மாற்றுகிறது ஈரான்!

## அமெரிக்காவை எச்சரிக்கிறது இஸ்ரேல்!

ஜெருசலேம், ஜுன் 22

ஈரான் அதிக அணு ஆயுதங்களை விற்க விரும்புகிறது. இதற்காகவே சர்வதேசம் தொடர்பான கொள்கைகளை மாற்றி அமைக்கவுள்ளது என்று அமெரிக்காவையும் அதன் கூட்டணி நாடுகளையும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை அமெரிக்கா உள்ளிட்ட அதன் கூட்டணி நாடுகள் மீளாய்வு செய்து வருகின்றன என்று செய்திகள் வெளியான நிலையிலேயே இஸ்ரேல் இவ்வாறு எச்சரித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகள் ஈரான் குறித்து விழித்துக் கொள்ள வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் நப்தாலி பென்னட் தெரிவித்துள்ளார்.

ஆனால், இஸ்ரேல் பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது. ஈரான் அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து டிரம்பின் ஆட்சியின் போது அமெரிக்கா வெளியேறியது. எனினும், அந்த ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்து வருவதாக கொள்கை வகுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், மேலும் சில தீர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் அதில் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள இப்ராஹிம் ரைசி, உலகத்துடனான ஒத்துழைப்பு மற்றும் தொடர்புகளை வலுவாக்குவது தனது அரசின் முன்னுரிமையாக இருக்கும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சீனாவில் 100 கோடி பேருக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன!

பீஜிங், ஜுன் 22

சீனாவில் 100 கோடிக்கும் அதிகமானோருக்கு கோவிட் 19 தடுப்பூசி செலுத்தப்பட்டதாக தேசிய சுகாதார ஆணையகத்தின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகெங்கும் வழங்கப்பட்ட மொத்த கோவிட் தடுப்பூசி எண்ணிக்கையில் இது மூன்றில் ஒரு பங்காகும்.

சீனாவில் இருந்து பரவ ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று உலகில் தொடர்ந்து பேரழிவுகளை ஏற்படுத்தி வருகிறது. எனினும், சீனா தொற்று நோயை கட்டுப்படுத்தியுள்ளது. அத்துடன் தடுப்பூசி போடும் பணிகளையும் துரிதப்படுத்தியுள்ளது.

சீனாவின் மக்கள் தொகை 140 கோடியாக உள்ள நிலையில் இதுவரை 100 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. ஜுலை மாதத்துக்குள் ஒட்டு மொத்த சனத்தொகையில் 40 வீதமானோருக்கு முழுமையாக இரண்டு தடுப்பூசிகளையும் போட அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

அத்துடன், மொத்த மக்கள் தொகையில் குறைந்தது 70 வீதமானவர்களுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் தடுப்பூசி போடப்படும் என்று சீன தேசிய சுகாதார ஆணையகத்தின் உபதலைவர் ஜெங் யிக்சின் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு முதல் சீனாவில் மொத்தம் 21 கோவிட்-19 தடுப்பூசிகள் மருத்துவ பரிசோதனைகளில் இருந்தன. இதுவரை நான்கு தடுப்பூசிகளுக்கு நிபந்தனையுடனான சந்தைப்படுத்தல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று தடுப்பூசிகளுக்கு அவசரகால பயன்பாட்டுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 15 வாகனங்கள் மோதி விபத்து: 9 சிறுவர்கள் உட்பட 10 பேர் பலி!

நியூயோர்க், ஜுன் 22

அமெரிக்காவில் ஒரே நேரத்தில் 15 வாகனங்கள் மோதிய விபத்தில் 9 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் அலபாமா மாகாணத்தில் கிளாடிட் புயல் பாதிப்பால் தென்கிழக்கு பகுதியில் கனமழை பெய்தது. இந்நிலையில், கைவிடப்பட்ட அல்லது துன்புறுத்தலுக்கு ஆளான சிறுவர்கள் உள்பட பலருக்கு அடைக்கலம் அளிக்கும் காப்பகம் ஒன்றுக்கு சொந்தமான பேருந்து அவர்களை ஏற்றிச் சென்றுள்ளது.



அந்தப் பேருந்து நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானது. இதில் 15 வாகனங்கள் அடுத்தடுத்து மோதின. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 8 சிறுவர்கள் உயிரிழந்தனர். கொல்லப்பட்டவர்கள் 4 முதல் 17 வயது வரையானவர்களாவர்

இதேபோன்று, வேறொரு வாகனத்தில் பயணித்த கைக்குழந்தையும், 29 வயது நபரும் உயிரிழந்தனர். இதனால், இந்த விபத்தில் மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர். (ஐ)

# ஹொங்கொங்கின் அப்பிள் டெய்லி பத்திரிகை மூடப்படும் அபாயத்தில்!




ஹொங்கொங், ஜுன் 22

ஹொங்கொங்கில் ஜனநாயக உரிமையை வலியுறுத்தி வரும் அப்பிள் டெய்லி நாளிதழை எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் மூடுவது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

சுயாட்சி உரிமை பெற்ற ஹொங்கொங்கின் அதிகாரங்களை சீனா மீளப் பறித்துள்ளது. இதற்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தியும் போராட்டங்களை ஹொங்கொங் மக்கள் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களை சீன அரசு வலிந்து அடக்கி வருகின்றது. இந்த நிலையில், ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி குரல் எழுப்பி வரும் அப்பிள் டெய்லி நாளிதழ் மீதும் சீன அரசு அடக்கு முறைகளை பிரயோகித்து வருகின்றது.

அந்த நாளிதழின் நிறுவுநர் ஜிம்மி லாய்க்கு 20 மாத சிறைத் தண்டனை விதித்த சீனா, கடந்த வியாழக்கிழமை நாளிதழின் பிரதம ஆசிரியர் உட்பட 5 நிர்வாக ஆசிரியர்களை கைது செய்தது.

அத்துடன், அந்த நிறுவனத்துக்கு சொந்தமான 18 மில்லியன் அமெரிக்க டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 360 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள், வங்கிக் கணக்குகளையும் முடக்கியுள்ளது. இதனால், அந்தப் பத்திரிகையை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் அந்தப் பத்திரிகை மூடப்படலாம் என்று தற்போதைய நிர்வாகக்குழு தெரிவித்துள்ளது. தற்போது நாளிதழிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு சில வாரங்களுக்கே இயங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், பத்திரிகையை தொடர்ந்தும் நடத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன என்று தெரிய வருகின்றது. (ஐ)

# நியூயோர்க்கில் 3000 பேர் கூடி யோக பயிற்சியில் ஈடுபட்டனர்

நியூயோர்க், ஜுன் 22

அமெரிக்காவில் நியூயோர்க் ரைம்ஸ் சதுக்கத்தில் நடத்தப்பட்ட சர்வதேச யோகா தின நிகழ்வில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

7ஆவது சர்வதேச யோகா தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதன்போது இந்திய துணைத் தூதரகம் அமெரிக்காவின் நியூயோரக் ரைம்ஸ் சதுக்கத்தில் நேற்று விசேட நிகழ்வை நடத்தியது.

சங்கராந்தி என்று பெயரிடப்பட்ட இந்த நிகழ்வில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்று யோகாசனங்களை செய்தனர். (ஐ)





# 25 இலட்சம் கோவிட் தடுப்பூசிகள் அமெ. தாய்வானுக்கு அன்பளிப்பு

வாஷிங்டன், ஜுன்22

சீன ஆட்சேபனையை மீறி தாய்வானுக்கு 25 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை அமெரிக்கா அனுப்பியுள்ளது. அந்த நாட்டுக்கு மொடர்னா நிறுவனத்தின் 7.5 இலட்சம் தடுப்பூசிகளை வழங்கி உதவுவதாக அமெரிக்க அதிகாரிகள் இந்த மாதத் தொடக்கத்தில் உறுதியளித்திருந்தனர். ஆனால், அதைவிட மும்மடங்கு அதிக தடுப்பூசிகள் தற்போது அனுப்பப்பட்டுள்ளன.

தாய்வானில் கொரோனா பாதிப்பு மோசமாக இல்லை என்றாலும், கடந்த மே மாதத்தில் புதிதாக அந்த நோய் உறுதி செய்யப்படுவோர் தொகை கணிசமாக உயர்ந்தது. இதையடுத்து, அங்கு தடுப்பூசிக்கான தேவை அதிகரித்தது.

இந்த சூழலில் தாய்வானுக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா இந்தத் தடுப்பூசிகளை அனுப்பிவைத்துள்ளது. (ஐ)



## மேற்கிந்தியத்தீவுகளுக்கு 324 ஓட்ட இலக்கு நிர்ணயம்!

குரோஸ்ஐலட், ஜூன் 22

மேற்கிந்தியத் தீவுகளுக்கு 324 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்துள்ளது தென்னாபிரிக்க அணி.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சென்றுள்ள தென்னாபிரிக்க அணி. இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதுகின்றது. முதல் போட்டியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தற்போது நடக்கும் இரண்டாவது போட்டியிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது.

தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 298 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 149 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம், தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

53 ஓவர்களே தாக்குப்பிடித்த அந்த அணி, 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில், வான் டெர் துஷன் மட்டும் 75 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவருக்கு பின்னர் அதிக ஓட்டங்களை எடுத்த வீரராக ரபாடா (40 ஓட்டங்கள்) இருந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் கெமர் ரோச் 4 விக்கெட்களையும், கைல் மேயர்ஸ் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

வெற்றிக்காக 324 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது மேற்கிந்திதயத் தீவுகள் அணி. பிராத்வெயிட், கிரன் பாவல் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர்.மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது அந்த அணி 15 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிராத்வெயிட் 5, பாவல் 9 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தனர். (ஐ)

### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

# 4ஆம் நாள் ஆட்டம் மழையால் பாதிப்பு

சௌதாம்ப்டன், ஜூன் 22

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் மழையால் தடைப்பட்டது. மதிய போசன நேரம் வரை நேற்றைய நாள் ஆட்டம் தொடங்கப்படவில்லை.

ஐ.சி.சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்தின் சௌதாம்ப்டனில் நடக்கிறது. இதில், இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன.

18ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியின் முதல்நாள் ஆட்டம் மழையால் இரத்தானது. இரண்டாம் நாளில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து இந்தியாவை துடுப்பெடுத்தாட அழைத்தது. முதல் இனிங்ஸில் 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்தியா.

நியூஸிலாந்து அணிக்காக பந்து வீசிய ஜமைசன் 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது நியூஸிலாந்து அணி.



ரொம் லதம், டெவன் கொன்வே தொடக்கம் கொடுத்தனர். இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரொம் லதம் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கொன்வேக்கு மறுமுனையில் கேன் வில்லியம்சன் களம் புகுந்தார். சிறப்பான முறையில் ஆடி அரைச் சதம் கடந்த கொன்வே 54 ஓட்டங்களுடன் இஷாந்த் சர்மாவின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

கேன் வில்லியம்ஸனுடன் றோஸ் ரெயிலர் இணைந்து ஆட ஆரம்பித்த நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது நியூஸிலாந்து அணி 101 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் மழையால் மதியபோசன இடைவேளை வரை தொடங்கவில்லை.

போட்டி நாட்கள் மழையால் பாதிக்கப்பட்டாலும், நிறுத்தப்பட்ட நாட்களை கணக்கில் கொண்டு மேலதிகமாக நேரம் வழங்க நடுவர்களுக்கு இந்தப் போட்டியில் ஐ.சி.சி. அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போர்த்துக்கல் சுயகோல்கள்: ஜேர்மனி அணி இலகுவெற்றி!

முனீச், ஜூன் 22

போர்த்துக்கல்லின் வீரர்கள் இருவர் அடித்த சுயகோல்களால் ஜேர்மனியிடம் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் எவ் பிரிவில் இடம் பெற்றுள்ள இரு அணிகளும் ஜேர்மனியின் முனீச் நகரில் மோதின.

அட்டகாசமாக தொடங்கிய இந்தப் போட்டியில், 15-ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் சில்வா அடித்த பந்தை ஜோடா கடத்திக் கொடுக்க றொனால்டோ அதை அற்புதமாக கோலாக்கினார்.

35ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் வீரர் ஜேர்மன் வீரர் கிம்மிச் அடித்த பந்தை சகவீரரான கோசன்ஸ் உதைத்தார். பந்தை ஜேர்மன் வீரர் ஹாவெட்ஸூம் போர்த்துக்கல் வீரர் ரூபன் டியாஸூம் வசப்படுத்த முயல ரூபன் டியாஸின் காலில் பட்டு அது சுயகோலானாது.

அடுத்த 4 நிமிடங்களில் போர்த்துக்கல் வீரர் ரபேல் குவெய்ரோவின் காலில்பட்டு மீண்டும் ஒரு சுயகோல் போனது. போர்த்துக்கல்லின் இந்த இரு சுய கோல்களாலும் ஜேர்மனிமுன்னிலை பெற்றது.

எனினும், பிற்பாதி ஆட்டத்தில் ஜேர்மனி வீரர்கள் இரு கோல்களும், போர்த்துக்கல் ஒரு கோலும் அடித்த நிலையில் 4-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வெற்றி பெற்றது. (ஐ)




## விம்பிள்டனில் விளையாடுவேன் சிமோனா ஹாலேப் அறிவிப்பு

புசாரெஸ்ட், ஜூன் 22

ரென்னிஸ் தரவரிசையில் முதல்நிலை வீராங்கனையாக வலம் வந்த சிமோனா ஹாலேப் அடுத்த வாரம் தொடங்கவுள்ள விம்பிள்டன் தொடரில் விளையாடவுள்ளார்.

ரோமில் நடந்த தொடரில் முதல்நிலை வீராங்கனையான சிமோனா ஹாலேப் காலில் காயமடைந்தார். இதனால் அவரில் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் தொடரில் பங்கேற்க முடியாது போனது.

இந்த நிலையில் கிராண்ட்ஸ்லம் அந்தஸ்துபெற்ற விம்பிள்டன் ஓப்பன் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டியில் அவர் விளையாடுவாரா மாட்டாரா என்ற கவலை ரசிகர்களுக்கு எழுந்தது. இந்த நிலையில் அவர் தனது ருவிட்டரில் வெளியிட்ட காணொலியில், “நான் இன்னமும் பூரணமாக குணமடையவில்லை. ஆனால், போதிய ஓய்வும் மனஉறுதியையும் கொண்டுள்ளேன். விம்பிள்டன் தொடரில் நிச்சயம் ஆடுவேன்”, என்று கூறியுள்ளார். (ஐ)

### யூரோ உதைபந்தாட்டம்

## போலந்து - ஸ்பெயின் போட்டி சமநிலையில்!

போலந்து அணிக்கு எதிராகக் கிடைத்த தண்டனை உதையை (பெனால்டி) கோலாக மாற்ற ஸ்பெயின் அணி தவறியது. இதனால், அந்தப் போட்டி 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

யூரோ கிண்ண உதைபந்தாட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த இ பிரிவுக்கான போட்டியில் ஸ்பெயின், போலந்து அணிகள் மோதின.

25ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணிமுதல் கோலை அடித்தது. பொக்ஸ் பகுதியின் ஓரத்தில்இருந்து ஜெரார்ட் மொரேனோ அடித்த பந்தை கோல் கம்பத்துக்கு மிக நெருக்கமாக நின்ற அல்வாரோ மொராட்டா கோலாக மாற்றினார். ஆனால் இது முதலில் ஓவ்சைட் கோல் என அறிவிக்கப்பட்டது. பின்னர் ஸ்பெயின் அணி மேல் முறையீடு செய்ய கோல் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து போலந்து அணி இரு முறை கோல் அடிக்க மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. முதல் பாதியில் ஸ்பெயின் 1-0 என முன்னிலை பெற்றது.

54ஆவது நிமிடத்தில் போலந்து அணி பதிலடி கொடுத்தது. கமில் ஜோஸ்வியாக் அடித்த பந்தை ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி தலையால் முட்டி கோலாக மாற்றினார். இதனால் போட்டி 1-1 என்ற சமநிலையை எட்டியது.

55-வது நிமிடத்தில் ஜெரார்ட் மோரேனோவை பொக்ஸ் பகுதிக்குள் விதிமுறைகளை மீறி போலந்து வீரர் ஜாகுப் மோடர் தடுத்தார்.

இதனால் ஸ்பெயின் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இதை ஸ்பெயின் அணி சரியாகப் பயன்படுத்தவில்லை.

போட்டி முடிவடையும்வரை இரு அணிகளும் மேலதிகமாகக் கோல் எதுவும் அடிக்காததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)



கொத்தலாவலை சட்டமூலத்துக்கு எதிராக

# பல்கலைக்கழக மாணவர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

**கொழும்பு, ஜூன் 22**

**கொத்தலாவலை தனியார் பல்கலைக்கழகத்துக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது.**



கொதலாவல தனியார் பல்கலைக்கழக சட்டமூலம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே அமைதியின்மை ஏற்பட்டது.

கொரோனா வழிகாட்டல்களின் கீழ், பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையிலேயே, இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தாம் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். (இ)

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட

# லிந்துலை நகர சபை தலைவர் உட்பட 7 பேர் தனிமைப்படுத்தல்

*தலவாக்கலை,ஜூன்22*

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட தலவாக்கலை - லிந்துலை நகர சபைத் தலைவர் பாரதிதாசன் உட்பட 7 பேர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் வேண்டுகோளின் பிரகாரம் 14 நாட்கள் கட்டாய சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுயதனிமை விதிமுறைய மீறி விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட தலவாக்கலை நகர சபைத் தலைவர் உட்பட தலவாக்கலை நகர வர்த்தகர்கள் அறுவர் தலவாக்கலை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சுயதனிமை விதிமுறையை மீறி தனியார் மண்டபம் ஒன்றில் விருந்துபசாரத்தில் ஈடுபடுகின்றனர் என்று 119 அவசர அழைப்பு மூலம் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய தலவாக்கலைப் பொலிஸார் சோதனையிட்ட போது அங்கிருந்த நகர சபைத் தலைவர் உட்பட வர்த்தகர்கள் 6 பேர் அடங்கலாக 7 பேர் கைது செய்யப்பட் டனர். அவர் களை விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்த பொலிஸார், வழக் குப் பதிவு செய்து நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும் நடவடிக்கை எடுத்தனர். (இ)

# அளவுக்கு அதிகமான மது போத்தல்களை வைத்திருந்த ஐவர் யாழ்ப்பாணத்தில் கைது!

*யாழ்ப்பாணம், ஜூன் 22*

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சட்டத்தால் கூறப்பட்ட அளவைவிட அதிகளவான மது பானப் போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் இருந்து 90 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கடந்த மாதம் 21ஆம் திகதி நாட்டில் பயணத் தடை நடைமுறைக்கு வந்த நிலையில், ஒரு மாத காலத்தின் பின்னர் நேற்று மதுபானசாலைகள் திறக்கப்பட்டன.

இதன்போது, 10இற்கும் அதிகமான மதுபானப் போத்தல்களைக் கொள்வனவு செய்து, எடுத்துச் சென்ற ஐவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மூவரும், கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஒருவரும், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மேலதிக நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டனர். (இ-3)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 - 10 - 1950 |  | 18 - 06 - 2021 |

## சந்தியோ மதியாபரணம்

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Toulouse ஐ வதிவிடமாகவும் கொண்ட சந்தியோ மதியாபரணம் அவர்கள் 18-06-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மரியான் சந்தியோ –அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து பிரான்சிஸ் – செசிலியா தம்பதியரின் பாசமிகு மருமகனும்,காலஞ்சென்ற மதியாபரணம் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும்,ஆன்ஜெனிதா (கனடா ), அலன் (ஜேர்மனி), யூட் (பிரான்ஸ்), ராஜு (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தர்ஸன், ஜெகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற அலோசியஸ் ( மரியநாயகம் ), ராணி, மரியராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மொனிக்கம்மா ( அரியமணி ), மயில்வாகனம், தாசன், அடைக்கலமேரி, ஸ்ரனிஸ்லாஸ், மரியா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்றவர்களான றொபேட், சூசைப்பிள்ளை (யோசை) மற்றும் அமுதா ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற பகவத்சிங், யூடிற் யோகினி, ஜெனிதா, வீஜின் ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஜஃப்னி, பிரியதர்ஷினி, சந்தோஷ், கெவின், யொகான், பிலிப், டிஷோன், ஸ்ரெபான், எல்லோரா, மரியோ, எப்ஸிபா, அனொன்ரிங், ஜெசூரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பார்வைக்கு :*
Get Direction
Monday, 21 Jun 2021 2:00 PM - 5:00 PM
Municipal Funeral 2 Rue de l'Abbé Jules Lemire, 31300 Toulouse, France.

*பார்வைக்கு :*
Get Direction
Tuesday, 22 Jun 2021 2:00 PM - 5:00 PM
Municipal Funeral 2 Rue de l'Abbé Jules Lemire, 31300 Toulouse, France.

*பார்வைக்கு :*
Get Direction
Wednesday, 23 Jun 2021 2:00 PM - 5:00 PM
Municipal Funeral 2 Rue de l'Abbé Jules Lemire, 31300 Toulouse, France.

*இறுதி ஆராதனை:*
Get Direction
Thursday, 24 Jun 2021 1:30 PM - 3:30 PM
Municipal Funeral 2 Rue de l'Abbé Jules Lemire, 31300 Toulouse, France.

தொடர்புகளுக்கு : **அலன் - மகன்**
Mobile : +4917646069897

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 - 02 - 1946 |  | 17 - 06 - 2021 |

## திருமதி முருகையா சீதாலட்சுமி

யாழ். அராலி கிழக்கு, அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா சீதாலட்சுமி கடந்த 17-06-2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், கந்தையா – விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா – சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும்,முருகையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் ஜெயராணி, யோகராணி, செல்வராணி, தர்மேந்திரன், காலஞ்சென்ற விஜயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், மணிசேகரன், கமால், பாலச்சந்திரன், ரவீன், மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகசுந்தரம், காலஞ்சென்ற சரோஜினி தேவி, சிவாயணசுந்தரம், சிவயோகசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற மயில்வாகனம், செல்லம்மா, தெய்வானை, சரஸ்வதி, செல்லத்துரை, ராஜேந்திரன், ரங்கநாதன், மாணிக்கவாசகர், நாகேஸ்வரி, அருமைதுரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேத்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (22-06-2021) செவ்வாய்க்கிழமை ஜெயரட்ண மலர்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பி.ப 03:00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : **ஜெயராணி - மகள்**
Mobile : +14165604219

**தகவல்: குடும்பத்தினர்.**

# நாவலப்பிட்டியில் ஹெரோயினுடன் அறுவர் கைது

*நாவலப்பிட்டி, ஜூன் 22*

நாவலப்பிட்டியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யும் சந்தேகநபர்கள் 06 பேரைப் பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 24, 26 வயதுடைய பெண்கள் இருவர் அடங்குகின்றனர் என்றும் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதர் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி செலான் பிரிட்ஜ் பகுதியிலுள்ள வீடொன்றில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் போது அவர்களிடமிருந்து 112 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் கண்டி , நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் பல்வேறு சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டவர் எனவும் பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நாவலப்பிட்டி பிரதான பொலிஸ் பரிசோதகர் மேலும் கூறினார். (இ)

## அரசாங்க...

கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கையின் தமிழ்பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்துப் பிழையுடன் வெளியிடப்பட்டுள்ளமை பெரும் அதிருப்தியையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாவும் விக்னேஸ்வரன் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவன:

"அண்மையில், கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்வதற்கான விபரங்களை அரசாங்க தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கையின் தமிழ் பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்துப் பிழையுடன் வெளியிடப்பட்டுள்ளமை எனக்கு பெரும் அதிருப்தியையும் அதிர்ச்சியையும் தருகின்றது.

வட மாகாணத்தின் பெயர்கள் தவறாக எழுதப்பட்ட இடங்கள் சிலவற்றை சுட்டிக்காட்டலாம் என எண்ணுகிறேன். உதாரணமாக யாழ்ப்பாணத்தை யாழ்பாணம் என்றும் முல்லைத்தீவை முள்ளைத்தீவு என்றும் எழுதியுள்ளார்கள். அதேபோன்று துணுக்காய் என்பதை துணுக்கை என்றும் கூழா முறிப்பு என்பதை கோல முறிப்பு என்றும் முழங்காவில் என்பதை முலங்கவில் என்றும் இயக்கச்சியை ஐயக்கச்சி என்றும் பிழையாக எழுதியுள்ளார்கள். இங்கே நான் குறிப்பிட்டவை சில உதாரணங்களே. அரச தகவல் தொடர்பு நிலைய இணையத்தில் ஏனைய விபரங்களைப் பார்வையிடலாம். இவை அனைத்தும் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் முக்கிய அரசாங்க அலுவலகத்தின் அறிவிப்பு வெளியீடு இத்தகைய தமிழ் பிழைகளுடன் வெளியிடப்படுவது என்பது சாதாரண விடயமல்ல. இதனைத் திருத்துவதற்கு சரியான வகையில் ஒரு தமிழ் அதிகாரியை அல்லது அலுவலரை குறித்த அலுவலகம் கொண்டிருக்கவில்லையா என்ற கேள்வியும் எனக்கு எழுகின்றது.

காலம் காலமாக தமிழ் மொழியை பிரயோகிப்பதில் அரச நிர்வாகம் கண்டு வரும் தோல்வியின் தொடர்ச்சியாகவும், தமிழ் மொழி மீதான மதிப்பற்ற தன்மையும் அலட்சியப் போக்காகவுமே இது நடந்திருக்கின்றது என்பதை மாத்திரம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெயர்கள் மாத்திரமின்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவமதிப்பு செய்யப்பட்டுள்ளனர் என்றே இதனைக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே, பேருந்துகளில் தமிழ்மொழியை தூசன வார்த்தைகளாக எழுதப்பட்டதை கண்டு மிக வேதனை அடைந்திருக்கிறேன். தென்னிலங்கையில்தான் இதனை அதிகமாக கண்டிருக்கிறோம். அத்துடன் பல அரச திணைக்களங்களில் கூட தமிழ்மொழி பிழையாக எழுதப்பட்டு இருப்பதை ஊடகங்கள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேபோன்று அரச சுற்று நிருபங்கள் கூட தமிழ்மொழியில் வெளியிடப்படாமல் தனிச் சிங்களத்தில் வருவதனாலும் கூட இன்றுவரை தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதையும் நினைவு படுத்த விரும்புகிறேன். அத்துடன் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சில திணைக்களங்களுக்குச் சென்றால், மக்கள் தமிழில் உரையாடி தமது தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. தமிழுடன் தமிழர்களும் இங்கே புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். தமிழ்மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது. செம்மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றிருக்கிறது. இன்று தமிழ்மொழி இல்லாத நாடு இல்லை என்று சொல்லலாம். உலக நாடுகள் பலவற்றில் தமிழுக்கு மிக உயரிய மதிப்பு வழங்கப்படுகின்ற போது, தமிழ் மக்கள் பல ஆயிரம் வருட பூர்வீகத்தை கொண்ட தங்கள் நிலத்தில் சுதேசிகளான தமிழ் மக்களின் தமிழ் மொழி கொலை செய்யப்படுகின்றமை பெரும் மன உளைச்சலையும் வேதனையையும் தருகின்றது.

இந்த விடயத்தில் நான் அரசை மாத்திரம் குற்றம் சொல்ல மாட்டேன். டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் காலம் காலமாக அமைச்சராக இருந்து தமிழர்களுக்கு தொண்டு புரிவதாக சொல்லி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு அதிகாரத்தையோ அல்லது அபிவிருத்தியையோ கூட இவர்களினால் பெற்றுக்கொடுக்க முடியாது போனாலும் ஆகக்குறைந்தது தமிழ் மொழிக் கொலையையாவது தடுக்க முடியாத கையறு நிலையில் இருக்கிறார்கள்.

தனிச்சிங்கள சட்டமும், தமிழ் மொழி மீதான புறக்கணிப்பும், மொழி அழிப்பும் இந்த தீவில் பாரிய விளைவுகளை உண்டு பண்ணிய பின்னரும்கூட தொடர்ந்தும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஆகவே, நான் மேலே சுட்டிக்காட்டியுள்ள விடயத்தில் அரசாங்க தகவல் நிலைய இணையம் தவறுகளை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மொழியை அழிப்பதும் இனவழிப்புத்தான் என்பதை மறந்து விடக்கூடாது என்பதையும் இந்த இடத்தில் நினைவு படுத்திக்கொள்கிறேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசியமான...

அடங்கும் அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பகுதிநிலை அரச நிறுவனங்கள், பணியாளர்களை சேவைக்கு அழைப்பதற்கான நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள காலப் பகுதியில் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடங்காத அரச நிறுவனங்களின் பணியாளர்கள் அதிகபட்சமாக வாரத்தில் இரண்டு நாட்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்க முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வீட்டில் இருந்து பணியாற்றமுடியா விட்டால் மாத்திரமே அவர்களை இவ்வாறு சேவைக்கு அழைக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பொதுப் போக்குவரத்து சேவை ஒதுக்கப்பட்டுள்ளதால் சேவைக்கு அழைக்கப்படும் பணியாளர்களுக்கு சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, வீட்டிலிருந்து அலுவலகத்துக்கான போக்குவரத்து வசதியை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களும் குறைந்தபட்ச பணியாளர்களுடன் அலுவலகப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் முடிந்தளவில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வீட்டில் இருந்து பணியாற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் என வகைப்படுத்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சுகாதார வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத் திறனை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களையும் அதிகாரிகளையும் மட்டுமே அனுமதிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஆசிரியர்களுக்கு கைபேசி வழங்குவதற்கு அரசு திட்டம்!

### இராஜாங்க அமைச்சர் பியல்

கொழும்பு, ஜூன் 22

இணையவழி கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு கைபேசி அல்லது கைக்கணனி(tablet) பெறுவதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது என்று ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் இணையவழி கல்வி முறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டீ சில்வா தெரிவித்தார். தகவல் துறை தொடர்பான ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா பேரிடர் காலத்தில் ஆசிரியர்கள் இணையவழி கற்பித்தலில் மிகவும் அர்ப்பணிப்புடன் உள்ளனர். அவர்கள் உறுதியுடன் இருந்தாலும் அவர்களிடம் கைபேசி, கைகணனி போன்ற சரியான வசதிகள் இல்லை.

எனவே கடன் வசதியை அனுமதிப்பதன் மூலம் ஆசிரியர்கள் கைபேசி, கைகணனியை சலுகை விலையில் பெறுவதற்கு அரசு வங்கிகளுடன் கலந்துரையாடவுள்ளது என்றும் அவர் கூறினார்.

## இந்திய...

தொடர்பாக இந்தியத் தரப்பிலிருந்து அண்மைக்காலத்தில் அதிகளவுக்கு கரிசனை தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் இந்தப் பேச்சுக்கள் இடம் பெற்றிருப்பது முக்கியமானதாகும்.

"இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான பேச்சுகள் சிறப்பானதாக அமைந்திருந்தது. இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பில் இதன் போது நாம் ஆராய்ந்தோம். பிராந்திய உறவுகள் குறித்தும் பேசினோம். நாம் தொடர்ந்தும் நெருக்கமான தொடர்பில் இருப்போம்" என இந்தப் பேச்சுக்கள் குறித்து தனது ருவிட்டர் தளத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பதிவு செய்துள்ளார்.

## பாதிக்கப்பட்ட...

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 47 ஆவது அமர்வு நேற்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானபோது அவர் நிகழ்த்திய ஆரம்ப அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் முஸ்லிம்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என கருதப்படுபவை குறித்தும் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் நான் கரிசனை கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் பின்னணியில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காணாமல்ஆக்கப் பட்டவர்கள் - இழப்பீட்டு அலுவலகங்களிற்கான சமீபத்தைய நியமனங்கள் குறித்து நான் கரிசனை கொண்டுள்ளேன், கடந்தகால குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்காத நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகளை மேலும் பாதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது கரிசனத்தை வெளியிட்டுள்ளார். இந்த விதிமுறைகள் பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் கீழ் 300 முஸ்லிம்கள், தமிழர்களை தடுத்துவைக்க உதவியுள்ளனர். இவை நல்லிணக்கத்தை முன்னெடுக்க உதவப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதமயப்படுத்தப்பட்டவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் இன்றி இரண்டு வருடம் தடுத்து வைப்பதற்கு இந்த விதிமுறைகள் வழிவகுக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள வேளை நிகழ்கின்ற உயிரிழப்புகள் தொடர்வது குறித்து தான் சுட்டிக்காட்ட விரும்புகிறாரெனவும் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் நாம் தொடர்பாடல்களைக் கொண்டிருப்போம். பொறுப்புக்கூறல் விடயத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பில் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் கூட்டத் தொடரில் இற்றைப்படுத்தப்பட்ட புதிய தகவல்களை வெளிப்படுத்துவோம்" எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

## வியாழேந்தி...

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்ததாவது,

இராஜாங்க அமைச்சரின் வீட்டின் முன் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு மணல் டிப்பர் சாரதிக்கும் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையே வாக்குவாதம் நடந்துள்ளது.

டிப்பர் சாரதி நேற்று ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார். உயிரிழந்த சாரதியின் சடலம் மட்டக்களப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், சம்பவம் நடந்த நேரத்தில் இராஜாங்க அமைச்சர் வீட்டில் இல்லை.

துப்பாக்கிச் சூடு குறித்து மட்டக்களப்பு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## கண்டாவளையில்...

ரம் வெளியானது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று 293 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் வேலணை மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 4 பேருக்கும், சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 3 பேருக்குமாக 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேபோன்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 444 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 38 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இதன்படி, கிளிநொச்சி கண்டாவளை மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவருக்குமாக 15 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

ஒட்டுசுட்டான் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் பொதுவைத்தியசாலையில் இருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சுதத் சமரவீரவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 22

இலங்கை தொற்று நோயியல் பிரிவின் முன்னாள் தலைமை நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர உள்ளிட்ட தரப்பினர் கொரோனாத் தொற்று தொடர்பில் தவறான புள்ளி விவரங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வழக்கறிஞர் அருண லக்ஸிரி உனவடுன, பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னாள் தலைமை தொற்று நோயியல் நிபுணர் மற்றும் அந்தப் பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்ட குழு தமது கடமைகளைச் செய்யத் தவறியதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளனர் என்று அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்று காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் இருப்பவர்களின் எண்ணிக்கையை தமது விருப்பத்தின்படி மாற்றி வெளியிட்டதன் ஊடாக , தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தியுள்ளனர் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தண்டனைச் சட்டம் 289 பிரிவின்படி வைத்திய நிபுணர் சுதத் சமரவீர உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படியும் சட்டத்தரணி கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு உயிரிழந்தவர்கள் அனைவரும் உண்மையிலேயே கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்றும், முன்வைக்கப்பட்ட புள்ளி விவரங்கள் சரியானதா என்றும் விசாரணை நடத்தும்படியும் வழக்கறிஞர் அருண லக்ஸிரி உனவடுன கோரியுள்ளார். இதனிடையே, மருத்துவர் நிபுணர் சுதத் சமரவீரவுக்கு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளராக இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

பயண தடை நேற்று தளர்த்தப்பட்ட பின்

# அடகு கடைகளின் முன்பாக வரிசையில் காத்திருந்த மக்கள்

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒரு மாதமாக அமுலிலிருந்த பயணக் கட்டுப்பாடுகள் நேற்று அதிகாலை 4 மணிமுதல் தளர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், நாட்டின் பல நகரங்களிலும் அடகு கடைகள் மற்றும் வங்கிகளின் அடகுப் பிரிவுகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

பயணக் கட்டுப்பாடுகளின் போது அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், நாட்டின் பெரும்பாலான மக்கள் வீடுகளில் இருக்க நேரிட்டது.



இந்தக் கால கட்டத்தில் எந்த வருமானமும் கிடைக்காததால் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குக்கூட முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதையடுத்து தம்மிடம் உள்ள தங்க நகைகளை அடகு வைத்து பணம் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் அடகு கடைகளின் முன் காத்திருந்தனர்.

இதனிடையே, நாட்டில் இன்னும் கொரோனாத் தொற்று கட்டுக்குள் வராத நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியமைக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். (இ)

# சிலாபம் கடற்பரப்பில் வைத்து 308 கிலோ கேரள கஞ்சா மீட்பு!

கொழும்பு, ஜூன் 22

சிலாபம் கடற்பரப்பில் மூன்று நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 308 கிலோ கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதில் சிலாபம் - முக்கு தொடுவாவ கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கடலில் மிதந்து கொண்டிருந்த 23 கிலோவுக்கும் அதிகமான எடையைக் கொண்ட கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையின் வடமேற்கு கடற்படை கட்டளை பிரிவினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது கடலில் மிதந்து கொண்டிருந்த சாக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது குறித்த சாக்கில் இருந்து 10 பைகளில் பொதியிடப்பட்டிருந்த 23 கிலோவும் 100 கிராமும் எடை கொண்ட கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த 18, 19 மற்றும் 20ஆம் திகதிகளில் சிலாபம் கடற்பரப்பில் வைத்து சுமார் 308 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது என கடற்படை அறிவித்துள்ளது.(இ)

கப்பல் ஏற்படுத்திய சூழல் அழிவை மதிப்பிட

# ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியத்தால் விஷேட நிபுணர் குழு நியமனம்!

கொழும்பு, ஜூன் 22

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவலால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மாசடைவை மதிப்பீடு செய்யும் பணிகளில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை ஒன்றிணைந்து விசேட நிபுணர் குழுவொன்றை நியமித்திருக்கின்றன.

இந்தக் குழுவானது ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதவள உதவிப்பிரிவு, ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் தொடர்பான செயல்திட்டம் ஆகியவற்றின் கூட்டுத் தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதாகும்.

சூழல் பாதிப்புக்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளை முன்னெடுக்கும் மேற்படி குழுவானது, தம்மால் கண்டறியப்படும் விடயங்களையும் பரிந்துரைகளையும் சூழலியல் பிரச்னைகளைக் கையாள்வதற்காகக் குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படைகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும்.

உலகளாவிய அனர்த்தங்கள் மற்றும் நெருக்கடிகளின் போது உதவியளிப்பதற்கான ஐ.நாவின் விசேட பிரிவைச் சேர்ந்த ஹஸன் பார்ற்றோவின் தலைமையிலான மேற்படி மதிப்பீட்டுக்குழுவிற்கு எண்ணெய்க்கசிவு தொடர்பான ஆராய்வு மற்றும் பதில் நடவடிக்கைகள் தொடர்பான பிரான்ஸ் தேசிய நிலையத்தில் பணியாற்றும் கலாநிதி ஸ்டெப்னி லி ப்ளொச், கடல் மாசடைவு விவகாரத்தில் தேர்ச்சிபெற்ற கலாநிதி கமிலா லா க்ரொய்க்ஸ், சூழல் பாதுகாப்பு மற்றும் ஆராய்விற்கான இத்தாலியின் தேசிய நிறுவனத்தைச் சேர்ந்த லுய்கி அல்கரோ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
பகல்
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பொட்டு,தடம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : மாகாண மேம்பாட்டிற்கான டிஜிற்றல் தொழிநுட்ப வடக்கிற்கான தேசிய வேலைத்திட்ட சிறப்பு கலந்தரையாடல் நிகழ்ச்சி



6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு